வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 30.09.2024 திங்கட்கிழமை | இதழ் : 274 | பக்கங்கள் : 12

# பொதுத் தேர்தலில் பங்கேற்பதில்லை: தமிழ் பொதுச் சபை கூடி தீர்மானம்!

## சங்கு சின்னத்தையும் தவிர்க்க கோரிக்கை

திருமலை, செப்ரெம்பர் 30

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துதல் என்னும் அடிப்படையில் தோற்றம் பெற்ற தமிழ் மக்கள் பொதுச் சபை, எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் பங்குகொள்வதில்லை என்று முடிவெடுத்துள்ளதுடன், பொது வேட்பாளருக்காக பயன்படுத்தப்பட்ட சங்குச் சின்னத்தை பயன்படுத்துவதை அரசியல் கட்சிகள் தவிர்க்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.**

நேற்றைய தினம் திருகோணமலையில் இடம்பெற்ற தமிழ் மக்கள் பொதுச் சபையின் அவசர கூட்டத்தின் பின்னரே இந்த முடிவை அறிவிதிருக்கின்றது. தமிழ் மக்கள் பொதுச் சபையில் அங்கம் வகிப்பதாகச் சொல்லப்பட்ட 83 சிவில் சமூக அமைப்புக்களும் இந்த சந்திப்பில் பங்குகொள்ளாத போதிலும், தமிழ் சிவில் சமூக அமையம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கடுமையான அழுத்தங்களினாலேயே இவ்வாறானதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிய முடிகின்றது.

தமிழ் மக்கள் பொதுச் சபையும் ஏழு தமிழ் தேசிய அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்தே தமிழ் தேசியப் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியிருந்தன. தமிழ்த் தேசியப்

11

## திடீரென மாறிய முடிவு!

யாழ்ப்பாணம், செப். 30

கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு திடீரென மாற்றப்பட்டுள்ளது.

தமிழ் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சங்குச் சின்னத்தில் போட்டியிடுவதென கடந்த 26 ஆம் திகதி நடந்த கூட்டத்தில் பொதுக் கட்டமைப்பு தீர்மானித்தது. எனினும், தேர்தல் நடவடிக்கைகளில் பங்கேற்பதா இல்லையா என்பதை தீர்மானிக்க தமக்கு 2 நாட்கள் அவகாசம் வழங்குமாறு இந்த

11

## கூட்டமைப்புடன் இணைவது பற்றி பொதுக் கட்டமைப்புடன் பேசி முடிவு

### விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 30

தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து போட்டியிடும் கோரிக்கை தொடர்பில் தமிழ் பொதுக் கட்டமைப்புடன் பேசியே முடிவெடுக்க முடியும் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அனைவரும் ஒன்றிணையும் கோரிக்கை தொடர்பில் விக்னேஸ்வரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

11

## தமிழ்க் கட்சிகளை இன்று சந்திக்கும் இந்திய தூதுவர்

கொழும்பு, செப். 30

தமிழ்த் தேசியக் கட்சிகளை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் இன்று திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, தமிழ்த் தேசியக் கட்சிகளை அழைத்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அலுவலகத்தில் இன்று பிற்பகல் கலந்துரையாடவுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடனான இந்தியத் தூதுவரின் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. (அ)

## நாமலே பிரதமர் வேட்பாளர்! எவருடனும் கூட்டணியில்லை!!

### ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, செப். 30

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவே பிரதமர் வேட்பாளராக களமிறங்குவார். எவருடனும் கூட்டணியில்லை. தனித்தே போட்டியிடுவோம் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - ஜனாதிபதி தேர்தலில் எம்மை விட்டுச்

11

## சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டம் மீளாய்வு

### கிருஷ்ண ஸ்ரீனிவாசன் தலைமையிலான குழு அடுத்த வாரம் இலங்கை வருகிறது

கொழும்பு, செப். 30

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை மீளாய்வு செய்வதற்காக அதன் ஆசிய - பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் கிருஷ்ண ஸ்ரீனிவாசன் தலைமையிலான குழு அடுத்த வாரம் நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

இதன்போது சர்வதேச நாணய நிதியத்திற்கான நீடிக்கப்பட்ட நிதி வசதியின் மூன்றாம்

11

## யாழ்.இந்து கல்லூரியில் 52 மாணவர்களுக்கு 9 ஏ!

யாழ்ப்பாணம், செப். 30

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். இந்து கல்லூரியில் 52 மாணவர்களி 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

தமிழ்மொழிமூலம் 28 மாணவர்களும், ஆங்கில மொழிமூலம் 24 மாணவர்களும் இவ்வாறு 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

அத்துடன் 62 மாணவர்கள் 8 பாடங்களிலும், 43 மாணவர்கள் 7 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர். (அ)

## அரசமைப்பு பேரவைக்கு விஜித ஹேரத் நியமனம்!

### நிமல் சிறிபால டி சில்வா நீக்கம்

கொழும்பு, செப். 30

முன்னாள் ஜனாதிபதியின் பிரதிநிதியாக அரசியலமைப்பு பேரவையில் அங்கம் வகித்த நிமல் சிறிபால டி சில்வாவை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க அதில் இருந்து நீக்கியுள்ளார்.

அவருக்கு பதிலாக தனது பிரதிநிதியாக அமைச்சர் விஜித ஹேரத்தை ஜனாதிபதி அநுரநியமித்துள்ளார்.

11

## ஜனாதிபதி அநுரவுடன் பேச்சுக்கு இலங்கை வருகிறார் ஜெய்சங்கர்!

கொழும்பு, செப். 30

இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவு டன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என தெரிய வருகின்றது.

எதிர்வரும் 4ஆம் திகதி அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

முன்னதாக அநுரகுமார திஸாநாயக்க புதுடில்லிக்கு விஜயம் மேற் கொண்டிருந்தவேளை ஜெய்சங்கர் அவரை சந்தித்திருந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தின் போது இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் பல திட்டங்கள் குறித்து ஆராயப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

## கடந்த தேர்தலில் தோல்வியுற்றோருக்கு தமிழ் அரசின் வேட்புமனுவில் இடமில்லை!

### மத்திய செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, செப். 30

கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த முன்னாள் எம்.பிக்கள் மற்றும் ஏனையோருக்கு எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிப் பதில்லையென இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் வவுனியாவில் நடந்த கூட்டத்தில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இதற்கான யோசனையை கட்சியின் சிரேஷ்ட தலைவர் சி.வீ.கே.

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

கடந்த பல வாரங்களாக ஊர்க்குருவியால் பறக்க முடியவில்லை. பல்வேறு தரப்பினரும் அது குறித்து தொடர்ந்து விசாரித்துக் கொண்டே இருந்தனர். தொடர்ந்து எழுதமுடியவில்லை என்றாலும் இடையிடையே என்றாலும் எழுதலாமே என்று கேட்டவர்கள் பலர். நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்கு வது என்று பல்வேறு தரப்பினரும் முடிவெடுத்த ஆரம்ப நாட்களிலி ருந்து அதற்கு ஆதரவாக தொடர்ந்து எழுதி வந்தவர் இந்த ஊர்க்குருவியார். அதனால் தேர்தல் முடிந்த பின்னராவது அதுபற்றி எழுதவேண்டாமா என்று கனடாவிலிருந்து நண்பர் ஒருவர் கேட்டிருந்தார். நியாயமான கோரிக்கை தான் என்பதால் எழுதாமல் இருக்க முடியவில்லை.

இந்த விடயம் தொடங்கிய நாட்களில் தமிழ் மக்கள் இந்த தேர்தலை தமிழ் மக்களின் கருத்துக்கணிப்பாக எதிர்கொள்ளவேண்டும் என்று சிலர் கருத்துச் சொன்ன போது, அப்படி அதனை கருத்துக் கணிப்பாக நடத்தினால், தமிழ் மக்கள் அதற்கு ஆதரவு தரவில்லை என்றால் எமது அடிப்படைக் கோரிக்கையே ஆட்டம் கண்டு விடும் என்று பலரும் எச்சரிக்கை செய்தனர். நியாயமான எச்சரிக்கை தான். அதனால் தான், இது கருத்துக்கணிப்பு அல்ல, தமிழ் மக்கள் தமது ஒற்றுமையை வெளிப்படுத்தவும், இந்த நாட்டில் இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கும் இனப் பிரச்னைக்கு தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுமே தேர்தலை எதிர்கொள்வது என்று கூறப்பட்டது.

இப்போது தேர்தல் முடிந்து விட்டது. எதிர்பார்க்கப்பட்ட வாக்குகள் அவருக்கு கிடைக்கவில்லை என்றாலும், சிலர் எதிர்வுகூறியது போலல்லாமல் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் வாக்களித்திருக்கின்றனர். அதற்கு பல காரணங்களை கூறலாம். அது தமிழ் தேசியக் பொதுக்கட்டமைப்பு தமக்குள் சுயவிமர்சனங்களைச் செய்து, எதனால் அவ்வாறு எதிர்பார்க்கப்பட்டதுபோல வாக்குகள் கிடைக்கவில்லை என்பதை ஆராயவேண்டும். அதுவே எதிர்காலத்தில் அந்தக் கட்டமைப்பின் செயற்பாடுகளுக்கு உதவும்.

தேர்தல் முடிந்ததும், வடக்கு-கிழக்கில் தமிழர்களின் வாக்குகள் பதினைந்து இலட்சம் என்றும் அதில் வெறும் இரண்டு இலட்சம் வாக்குகளையே தமிழ் பொதுவேட்பாளர் பெற்றுவிட்டார் என்று வேறு சில மேதாவிகள் கதை சொன்னார்கள். அப்படியெனில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஒட்டுமொத்த தமிழ் தேசியக் கட்சிகளும் பெற்ற மொத்த வாக்குகளே அண்ணளவாக நான்கு இலட்சம் மட்டும்தானே. அப்போ கடந்த பாராளுமன்ற தேர்தலி லேயே தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கட்சிகள் என்று சொல்லும் நமது கட்சிகளை நிராகரித்துவிட்டனர் என கொள்ளலாமா?

இதுவல்ல இன்று நாம் சொல்ல வருவது,

நடந்த முடிந்த தேர்தலில் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் எழுபத்தி ஐந்து வீதமானவர்கள் சஜித் பிரேமதாஸவுக்கே வாக்களித்தனர் என்றும், அதாவது தமிழ் அரசுக் கட்சியின் கோரிக்கையையே அவர்கள் ஏற்றுக்கொண்டனர் என்றும் சிலர் பெருமை பேசி வருகின்றனர். சஜித் பிரேமதாஸவுக்குத்தான் தமிழ் மக்கள் பெருமளவில் வாக்களித்தனர் என்பது உண்மைதான். அதற்கு காரணம் தமிழ் அரசின் கோரிக்கைதான் என்பது மெட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவதற்கு சமனானது.

தமிழ் அரசு மேலும் இரண்டு கட்சிகளோடு தமிழ் தேசியக் கூட்டமைப்பாக கடந்த பாராளுமன்ற தேர்தலை சந்தித்தபோது, யாழ்ப்பாண மாவட்டத்தில் அதற்கு கிடைத்த மொத்த வாக்குகள் ஒரு இலட்சத்தி பன்னிரண்டாயிரம் தான். ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் பொதுவேட்பாளர் பெற்றது அதைவிட அதிகமானது. அவர் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு இலட்சத்து பதினாறாயிரம் வாக்குகளை பெற்றிருந்தார். தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவை ஆதரித்ததற்கு காரணம் தமிழ் அரசு கேட்டக்கொண்டதனால்தான் என்பதை ஏற்றுக்கொள்வதெனில், தமிழ் அரசு எதற்காக அவரை ஆதரிக்க முடிவு எடுத்ததோ அதற்காகத்தானே தமிழ் தமிழ் மக்களும் அவரை ஆதரித்திருக்கவேண்டும்.

தேர்தலில் போட்டியிட்ட பிரதான மூன்று வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் விரிவாக ஆராய்ந்ததாகவும், அதில் சஜித் சற்று அதிகமாக தருவதாக தெரிவித்திருப்பதாலேயே அவரை ஆதரிக்க முடிவெடுத்ததாகவும், தமிழ் அரசின் பேச்சாளர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

அதாவது அரசியலமைப்பு சட்டத்தில் இருக்கும் பதின்மூன்றாவது திருத்தத்தை அவர் முழுமையாக அமுல்படுத்துவதாக கூறியிருந்தார். மற்றையவர்கள் இருவரும் அதுபற்றி குறிப்பிட்டிருந்தாலும், அவர்கள் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதில் சில உறுதியான முடிவை தெரிவிக்கவில்லை. ஆனால் சஜித் பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று கூறியிருந்தார். அவரோடு கூட்டணியில் இருந்த மனோ கணேசனும் வடக்கு - கிழக்கில் சஜித்துக்கான தேர்தல் பிரசாரத்தில் சஜித்தை ஆதரியுங்கள், பதின்மூன்றை அவர் முழுமையாக அமுல்படுத்துவதை நான் உறுதி செய்வேன் என்று வேறு உறுதியளித்திருந்தார்.

ஆனால் தமிழ் பொதுவேட்பாளரோ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை பற்றியும் சமஷ்டி தீர்வு பற்றியும் வலியுறுத்தியிருந்தார்.

சஜித் பிமேதாஸவுக்கு பொருவாரியாக தமிழ் மக்கள் வாக்களித்திருப்பதால், தமிழ் மக்கள் இப்போது தமது பிரச்னைகளுக்கு தீர்வாக பதின்மூன்றை நிறைவேற்றினால் போதும் என்று தீர்ப்பு வழங்கிவிட்டனர் என கொள்ளலாமா என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

**- ஊர்க்குருவி**

# எதிர்க்கட்சியின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ரணில் தயார்!

## வஜிர பகிரங்க அறிவிப்பு



கொழும்பு, செப். 30

எதிர்க்கட்சியின் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியின் பணியை சரியாகச் செய்யத் தவறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காலியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுதந்திரத்தின் பின்னர் எதிர்க்கட்சியின் கடமைகளை உரிய முறையில் செய்யத் தவறிய கட்சியாக சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்திறனற்ற நிலையினால் 3 வீத வாக்குகளை கொண்ட தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் தேர்தலில் வெற்றியீட்டினர்.

சவால்களை வெற்றி கொண்டு எதிர்க்கட்சியின் பணிகளை ரணில் விக்கிரமசிங்க செய்கிறார். பொதுத் தேர்தலில் விரிவான கூட்டணி அமைத்து போட்டியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது - என்றார்.

# இலங்கையில் கடந்த எட்டு வருடங்களில் 43 இலட்சம் கடவுச்சீட்டுகள் விநியோகம்!

கொழும்பு, செப். 30

இலங்கையில் கடந்த எட்டு ஆண்டுகளுள் 43 இலட்சத்து 68 ஆயிரத்து 340 பேர் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொண்டுள்ளதாக மத்திய வங்கி அறிக்கை தெரிவிக்கின்றது.

இதனை பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த 27 மாதங்களில் மாத்திரம் 26 இலட்சத்து 40 ஆயிரத்து 640 பேர் கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொண்டுள் ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், கடந்த 27 மாதங்களில் 6 இலட்சத்து 84 ஆயிரத்து 100 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகங்களில் பதிவு செய்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக அதிகளவானோர் கடந்த 2023ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ளனர். அந்த எண்ணிக்கை 2 இலட்சத்து 97 ஆயிரத்து 656 ஆகும்.

கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுள் சுமார் 30 இலட்சத்துக்கும் அதிகமானோர் வாக்களித்திருக்கவில்லை.

அவர்களுள் அதிகமானோர் வெளிநாடுகளில் இருக்கலாம் என தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(அ)

# பசு மாடு வெட்டியவர்கள் மறியலில்!

யாழ்ப்பாணம், செப். 30

யாழ்ப்பாணத்தில் கன்றுத்தாச்சி மாட்டை கொலை செய்து இறைச்சியாக்கிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளில் ஈடுபட்ட பொலிஸார், மாட்டை வெட்டிய குற்றத்தின் பேரில் மூவரை கைது செய்தனர்.

பொன்னாலை கிருஷ்ணன் கோவிலுக்குப் பின்புறமாக உள்ள புதர் ஒன்றினுள் கடந்த வெள்ளிக்கிழமை ஐந்து மாத கன்றுத்தாச்சி மாட்டை வெட்டி இறைச்சியாக்கிய பின்னர், இறைச்சி கழிவுகளை அப்பகுதிகளில் வீசிச் சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், மல்லாகம் நீதவான் நீதிமன்றில் அவர்களை முற்படுத்திய வேளை அவர்களை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# பேக்கரி உற்பத்திகளின் விலையில் மாற்றமில்லை

கொழும்பு, செப். 30

முட்டையின் விலை குறைக்கப்பட்டாலும் முட்டை தொடர்பான பேக்கரி உற்பத்திகளின் விலையைக் குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலையில் மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே பேக்கரி உற்பத்திகளின் விலைகள் திருத்தப்படும் என அதன் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார். (அ)

# உயரடுக்கு பாதுகாப்புப் பிரிவில் உள்ள 2000 பேர் சாதாரண பொலிஸ் சேவைக்கு

கொழும்பு, செப். 30

தற்போது உயரடுக்கு பாதுகாப்பு பிரிவில் பணியாற்றும் 2000 அதிகாரிகளை சாதாரண பொலிஸ் சேவையில் இணைக்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

முன்னாள் அமைச்சர்கள் சிலருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பும், பல வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் இருந்த பின்னர் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத அமைச்சர்கள், உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை நீக்குவதற்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்காலத்தில் அமைச்சர்களுக்கான உயரடுக்கு பாதுகாப்பை வரம்பற்ற முறையில் பயன்படுத்துவதை நிறுத்த புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உயரடுக்கு பாதுகாப்பு அளிக்கும் மதத் தலைவர்கள், பிரதம நீதியரசர் தலைமையிலான மற்ற நீதிபதிகள் மற்றும் சட்டத்துறை தலைவர்கள், தூதுவர்கள், வெளிநாட்டு பிரதிநிதிகள் ஆகியோரின் பாதுகாப்பை பழைய முறையிலேயே முன்னெடுக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் முக்கியஸ்தர்களுக்கு உயரடுக்கு பாதுகாப்பை வழங்கவும் புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
30.09.2024 திங்கட்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் கவனத்திற்கு

அரசியல் தலைவர்கள் என்போர் மாற்றங்களை உற்றுநோக்கப் பழக வேண்டும். மாற்றங்களை உற்றுநோக்குவதற்கு பின் நிற்பவர்கள் - தயக்கம் காட்டுபவர்களால் தாங்கள் தலைமை தாங்கும் கட்சியை முன்கொண்டு செல்ல முடியாது. கடந்த 2019 ஜனாதிபதித் தேர்தலில் மூன்று வீத வாக்குகளை பெற்றிருந்த அநுரகுமார திஸநாயக்க மாற்றங்களை துல்லியமாக உற்றுநோக்கி, அதற்கேற்ப அரசியலை முன்னெடுத்த காரணத்தினாலேயே இப்போது அதிகாரத்தை கைப்பற்ற முடிந்தது.

இன்று நாடு தழுவிய வகையில் புதிய அரசியல் கலாசாரத்திற்கான அலையொன்று உருவாகிவருகின்றது. இந்த அலையோடு மிதந்து செல்லும் உத்தி தொடர்பிலேயே தமிழ் தேசியக் கட்சிகள் என்போர் சிந்திக்க வேண்டும். அண்மையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி வெளியிட்ட அறிவிப்பு வரவேற்கத்தக்கது - அதாவது, கடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுக்கு இம்முறை ஆசனம் இல்லை. இது ஒரு நல்ல பரிந்துரை. புதியவர்களை உள்வாங்கி, தலைமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு இவ்வாறான பரிந்துரைகள் பயனுடையது. இதனை ஏனைய கட்சியினரும் பின்பற்றலாம்.

மூத்த உறுப்பினர்களை முற்றிலுமாக ஒதுக்கிவிட வேண்டும் என்பதல்ல இதன் பொருள் - மாறாக, அவர்களை தேசிய பட்டியலில் உள்ளடக்கலாம். அவர்கள் புதியவர்களுக்கு வழிகாட்டுபவர்களாக இருக்க முடியும். தேர்தல் போட்டிக்கு தயார்படுத்தும் அனைத்து கட்சிகளும் இந்த விடயத்தை கருத்தில்கொள்ள வேண்டும்.

தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஏனைய கட்சிகள் அனைவரும் இந்த விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். மாற்றங்களை அனுசரித்து நடக்க வேண்டும். காலம் மாறும் போது, அதற்கேற்ப சிந்திக்கவும் செயற்படவும் வேண்டியது கட்டாயமானது. தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் நீங்கலாக ஏனையவர்கள் அனைவரும் தங்களுடைய முகத்தை சற்று பின்னுக்கு வைத்துக்கொள்வது நல்லது.

நாற்பது வருடங்கள் அரசியலில் இருந்தோம் என்று கூறும் பழைய பல்லவிகளை விடுத்து, கடந்த நாற்பது வருடங்கள் எதைச் சாதிக்க முடிந்தது என்னும் கேள்விக்கான பதிலிலிருந்தே தாங்கள் தொடர்ந்தும் இருக்கவேண்டுமா என்னும் கேள்விக்கான பதிலை உற்றுநோக்க வேண்டும். சில தேவையானவர்களை வைத்துக் கொண்டு புதியவர்களை உள்வாங்குவதன் ஊடாக, அரசியலை சுத்தம் செய்யும் போக்கொன்றை ஏற்படுத்துவதற்கு தமிழ்த் தேசிய கட்சிகள் முன்வர வேண்டும்.

இதனை மறுத்து செயல்பட எண்ணினால் நகைப்புக்கிடமான தேர்தல் பெறுபேறுகளையே பெற நேரிடும். தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவை தங்களின் முகங்களை முடிந்தளவு மாற்ற முயற்சிக்க வேண்டும். அண்மையில் சி.வி.விக்னேஸ்வரன், அடுத்த தேர்தலில் போட்டியிடுவதில்லை என்னும் முடிவை அறிவித்திருந்தார். இது வரவேற்கத்தக்க ஒரு விடயம். இது போன்ற செய்திகளையே ஏனைய மூத்த, உடல்ரீதியில் பலவீனமாக இருக்கும் அரசியல்வாதிகள் தங்களின் நிலையை மற்றவர்கள் தங்களுக்குச் சுட்டிக்காட்டும் நிலைக்கு ஆளாகாமல், மாற்றங்களின் முன்னோடியாக மாற வேண்டும். தமிழ் அரசியலில் மாற்றங்களின் ஆரம்பம் இவ்வாறுதான் நிகழும்.

# அநுரவுக்கு ரணில் அனுப்பிய கடிதம்!

கொழும்பு, செப். 30

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் செயலாளருக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பாதுகாப்பு குறித்து கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

தனது பாதுகாப்புக்காக பாதுகாப்புப் பிரிவொன்றை ஸ்தாபிக்குமாறு கோரி ரணில் விக்கிரமசிங்க இந்த கடிதத்தை அனுப்பியுள்ளதாக கூறப்படுகின்றது.

இதன்படி, அந்த கடிதத்தில் ரணில் விக்கிரமசிங்க கோரிய பாதுகாவலர்களின் எண்ணிக்கை 163 ஆகும். மேலும், 15 சமையல்காரர் கள், 6 மருத்துவ அதிகாரி கள், ஒரு கணினி மற்றும் பிரிண்டர் ஆகியவையும் கோரப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை அகற்றுவதாக தற்போதைய ஜனாதிபதி உறுதியளித்துள்ள சூழலில், ரணில் விக்கிரமசிங்க இந்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இரு ஆண்டுகளில் பல்கலைக்கழக அனுமதியை இழந்த 2941 மாணவர்!

கொழும்பு, செப். 30

கடந்த இரண்டு கல்வியாண்டுகளில் மட்டும் 2941 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

.இதன் காரணமாக, 2020/2021 கல்வியாண்டில் 1857 மாணவர்களும், 2021/2022 கல்வியாண்டில் 1084 மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தொடர்பான 2023ஆம் ஆண்டுக்கான சமீபத்திய கணக்காய்வு அறிக்கையின் கணக்காய்வு அவதானிப்புகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பதில் கணக்கு தணிக்கையில்-

அந்தந்த கல்வியாண்டுகளில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு மாணவர்கள் நியமிக்கப்பட்டிருந்தும் அந்த மாணவர்கள் சேர்க்கையை ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால் மேற்படி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கான அதிகபட்ச வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய தணிக்கை அலுவலகம் இது தொடர்பான தணிக்கை பரிந்துரைகளை வழங்கியுள்ளது. (அ)

# சந்தையில் தற்போது நாட்டு அரிசி பற்றாக்குறை; பெரும் அரிசி ஆலை உரிமையாளர்களே காரணம்

கொழும்பு, செப். 30

சந்தையில் தற்போது நாட்டு அரிசிக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், இந்த நிலைமையானது பாரியளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களினால் ஏற்படுத்தப்படுவதாகவும் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

எதிர்காலத்தில் நாட்டு அரிசி, கட்டுப்பாட்டு விலையில் விற்கப்படும் எனவும், இது அரசாங்கத்துக்கு ஆதரவாக எடுக்கப்பட்ட தீர்மானம் எனவும் பாரியளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் முன்னதாக அறிவித்திருந்தது.

பாரியளவிலான அரிசி ஆலை உரிமையாளர் சங்கம் நடத்திய ஊடக சந்திப்பின் போது, அதன் தலைவர் டட்லி சிறிசேன இதனைத் தெரிவித்திருந்தார்.

இதுவரைக் காலமும் கட்டுப்பாட்டு விலையில் அரிசி விற்கப்படவில்லை எனவும், இது விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் மேற்கொள்ளப்படும் பாரிய மோசடி எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், இந்த விடயத்தில் அரசாங்கம் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் பாரியளவிலான அரிசி ஆலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் டட்லி சிறிசேன கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையிலேயே, ஊடகங்களுக்கு கருத்துரைத்த சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சேமசிங்க இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், தற்போதைய ஜனாதிபதியின் வேலைத் திட்டத்தை ஆதரிப்பதாக டட்லி சிறிசேன கூறினார். கடந்த அரசாங்கங்களுடன் இணைந்து செயற்பட்ட வகையில், தற்போதைய ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட முடியாது என்பதை அவர் புரிந்துகொண்டுள்ளதையே இது காட்டுவதாகவும் சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சேமசிங்க தெரிவித்துள்ளார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



செப்ரெம்பர் - 30 திங்கட்கிழமை
குரோதி வருடம் - புரட்டாசி 14
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : திரையோதசி




**மேடம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**இடபம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**மிதுனம்**
குடும்பத்தினர் உங்கள்ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திருப்பங்கள் நிறைந்த நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் குறையும். பனிப்போர் வந்து நீங்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**விருட்சிகம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். புதுஇடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும் அதற்காக அலுத்துக் கொள்ளாதீர்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**கும்பம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

# துணை முதல்வரானார் உதயநிதி தமிழக அமைச்சரவையில் மாற்றம்

சென்னை, செப். 30

தமிழக அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மனோ தங்கராஜ், கே. இராமச்சந்திரன், செஞ்சி மஸ்தான் ஆகியோர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அமுலாக்கத் துறை வழக்கில் கைது செய்யப்பட்டு கடந்த 26ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்ட செந்தில்பாலாஜி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரோடு புதிதாக கோவி. செழியன், சா. மு. நாசர், ஆர். இராஜேந்திரன் ஆகியோரும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழக அமைச்சரவை தற்போது 5ஆவது முறையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. (எ)

# தி. மு. க. கூட்டணிக்குள் பகையை வளர்க்கும் முயற்சிகள் பலிக்காது

## பவள விழாவில் ஸ்டாலின் உறுதி



காஞ்சிபுரத்தில், செப். 30

"நாம் ஒற்றுமையாக இருப்பதை பார்த்து கொள்கை எதிரிகளுக்கு பொறாமையாக இருக்கிறது. இவர்களுக்குள் மோதல் வராதா? பகையை வளர்க்க முடியாதா? என்று வேதனையில் பொய்களைப் பரப்பி, அற்பத்தனமான காரியங்களைச் செய்து, தற்காலிகமாக சந்தோஷம் அடைந்து கொள்கிறார்கள். அவர்கள் கனவு எப்போதும் பலிக்காது" என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தி. மு. க. பவள விழாப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"பாராளுமன்ற, சட்டமன்ற வெற்றிக் கணக்கில் நம்முடைய அணி ஐக்கியமாகவில்லை. பாசிசத்தையும், மதவாதத்தையும் தமிழ்நாட்டில் அனுமதிக்கக் கூடாது என்பதற்காக, ஐக்கியமாகி இருப்பவர்கள் நாம்.

மாநிலங்களை ஒடுக்கி, ஒற்றையாட்சித்தன்மை கொண்டதாக இந்தியாவை மாற்றுவதற்கு "ஒரே நாடு - ஒரே தேர்தல்" என்ற திட்டத்தைக் கொண்டுவரப் பார்க்கிறது பா. ஜ. க. அரசு. "ஒரே நாடு - ஒரே தேர்தல்" சாத்தியமில்லாதது. இதைச் சொன்னால் - "1967 வரைக்கும் பாராளுமன்றத்துக்கும் சட்டமன்றத்துக்கும் ஒன்றாகத்தான் தேர்தல் நடந்தது" என்று சொல்கிறார்கள். அப்போது, இந்திய நாட்டின் மக்கள் தொகை என்ன? இப்போது மக்கள்தொகை என்ன? அன்றைய இந்தியாவும் - இன்றைய இந்தியாவும் ஒன்றா? அன்றைய வாக்காளர்களின் எண்ணிக்கை எவ்வளவு? இன்றைய வாக்காளர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

"ஒரே மதம் - ஒரே மொழி - ஒரே உணவு - ஒரே பண்பாடு - ஒரே தெரிவு - ஒரே தேர்தல் - ஒரே வரி" என்று ஒரே பாட்டை பாடிக்கொண்டிருக்கிறார்கள். நடைமுறை சாத்தியமற்ற, சிக்கல் நிறைந்த பிரச்னை இது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்துக்கும், மக்களாட்சித் தத்துவத்துக்கும் விரோதமானது. இதனால் என்ன நடக்கும்? பல மாநில அரசுகளின் பதவிக்காலம் குறையும். மாநிலங்களில் குழப்பம் ஏற்படும்"- என்றார். (எ)

# "செந்தில் பாலாஜியை தியாகி என்று ஸ்டாலின் சொல்வது வெட்கக்கேடானது"

## அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிச்சாமி சாடல்

சேலம், செப். 30

"ஊழல் குற்றச்சாட்டில் கைதான செந்தில் பாலாஜியை தியாகி என்று முதல்வர் ஸ்டாலின் சொல்வது வெட்கக்கேடானது"- இவ்வாறு அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிச்சாமி கடுமையாக சாடியுள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"தி. மு. க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட வாக்குறுதிகள் குறித்து வெள்ளை அறிக்கை கேட்டேன். ஆனால், 98 சதவீதம் நிறைவேற்றப்பட்டதாக பொய்ப் பிரசாரம் செய்து வருகிறார் ஸ்டாலின்.

செந்தில் பாலாஜிக்கு பிணை கிடைத்து வெளியே வந்துள்ளார். முதல்வர் மு. க. ஸ்டாலின், செந்தில் பாலாஜியை வருக, வருக என வரவேற்று, உன் தியாகம் பெரிது எனக் கூறி செய்தி வெளியிட்டுள்ளார். ஊழல் குற்றச்சாட்டில் கைதான செந்தில் பாலாஜியை தியாகி என முதல்வர் சொல்வது வெட்கக்கேடானது. தி. மு. கவை வளர்க்க போராடியவர்களுக்கு தியாகி பட்டம் இல்லை. பல கட்சிகளுக்கு சென்று வந்தவருக்கு தான் தியாகி பட்டம்"- என்றார். (எ)

# இந்தியாவின் சிறந்த பாரம்பரிய சுற்றுலா கிராமமாக கீழடி தெரிவு

சென்னை, செப். 30

நாட்டின் சிறந்த பாரம்பரிய சுற்றுலா கிராமமாக கீழடியை மத்திய சுற்றுலாத் துறை தெரிவு செய்துள்ளது.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகேயுள்ள கீழடியில் 10ஆம் கட்ட அகழாய்வு நடைபெற்று வருகிறது. அங்கு தமிழர்களின் 2,600 ஆண்டுகள் பழைமையான நகரநாகரிகம் இருந்தது கண்டறியப்பட்டது. மேலும், கீழடியில் கண்டறியப்பட்ட தொல்பொருட்களை பொதுமக்கள் பார்வையிடும் வகையில் பாரம்பரிய செட்டிநாடு கட்டட வடிவிலான உலகத் தரம் வாய்ந்த அகழ்வைப்பகம் அமைக்கப்பட்டது.



இந்த நிலையில், மத்திய சுற்றுலாத் துறை, தேசிய அளவில் கீழடியை சிறந்த பாரம்பரிய சுற்றுலா கிராமமாக தெரிவு செய்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவு!

## பொதுஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு, செப். 30

**இலங்கையில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தால் அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிபீ ரத்னாயக்க தெரிவித்தார்.**

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாற கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முழுமையான ஆதரவு கிடைக்கவில்லை. அவருக்கு எதிரான வாக்குகள் அதிகம். 30 லட்சம்வரையானோர் வாக்களிக்கவும் இல்லை. எனவே, எதிர்காலத்தில் பாரிய சவால்கள் உள்ளன. அந்த சவால்களில் இருந்து தாய் நாட்டை மீட்பதற்கு அவருக்கு நாம் ஆதரவு வழங்குவோம்.

அரசமைப்பு மறுசீரமைப்பு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்குதல் போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டால் நாம் முழு ஆதரவு வழங்குவோம்.

அதேவேளை, பொதுஜன பெரமுன கட்சி பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும்-என்றார். (அ)

# வலி வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் முக்கிய வீதிகளை திறந்துவிடவேண்டும்

## ஜனாதிபதியிடம் அங்கஜன் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், செப். 30

யாழ்ப்பாணத்தின் முக்கிய வீதிகளை மீண்டும் திறக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிடம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வலியுறுத்தியுள்ளார்.



வலி வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் வீதிகள் திறப்பது நல்லிணக்கத்தையும் பிராந்திய அபிவிருத்தியையும் பலப்படுத்தும் என இராமநாதன் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

"கொழும்பின் சமீபத்திய வீதி அணுகல் சீர்திருத்தங்களுக்கு இணங்க, யாழ்ப்பாணத்தின் முக்கிய வீதிகளை மீண்டும் திறக்குமாறு ஜனாதிபதி அனுராதிசநாயக்கவிடம் நான் வலியுறுத்த விரும்புகிறேன்," என்று அவர் கூறினார்.

கொழும்பில் உள்ள முக்கிய வீதிகளை பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டதை அடுத்து இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# தன்னைப் பற்றி மாத்திரமே சிந்திப்பவராக உள்ளார் சஜித்!

## மனுஷ நாணயக்கார சாடல்

கொழும்பு, செப். 30

"சஜித் பிரேமதாஸ இந்தச் சந்தர்ப்பத்தில் கூட தன்னைப் பற்றி மாத்திரமே சிந்திப்பவராகவே இருக்கின்றார். அவரால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்று நாம் நம்பவில்லை. எனவே, பொதுக் கூட்டணியின் கீழ் பொதுச் சின்னமொன்றில் பாராளுமன்றத் தேர்தலில் களமிறங்குவோம்."

-இவ்வாறு முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்-

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்குச் சேவையாற்றியிருக்கின்றார் என்பதை 22 இலட்சம் மக்கள் உணர்ந்துள்ளனர். ஏனைய 42 சதவீதமானோர் நாட்டில் மாற்றமொன்று வேண்டும் எனத் தீர்மானித்துள்ளனர். அந்த மக்கள் ஆணைக்கு நாம் மதிப்பளிக்கின்றோம்.

ஏனையோரைப் போன்று நாடு வீழ்ச்சியடையும் வரை பார்த்துக்கொண்டிருப்பவர்கள் நாம் அல்லர். யார் ஆட்சி செய்தாலும் நாடு அபிவிருத்தியடையவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

ஆனால், நாடு வீழ்ச்சியடைந்தபோது சஜித் பிரேமதாஸ பொறுப்புக்களை ஏற்கவில்லை. அவ்வாறான ஒருவரால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்று நாம் நம்பவில்லை. அதற்கான பலமிக்க தலைவராகவும் நான் அவரைப் பார்க்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய நாம் அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் கூட்டணியமைப்பதற்கு அழைப்பு விடுத்தோம்.

ஆனால், இந்த விடயத்திலும் சஜித் பிரேமதாஸ முன்னரைப் போன்றே பழைய நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார். தன்னைப் பற்றி மாத்திரமே அவர் சிந்திக்கின்றார்.

பரந்துபட்ட ரீதியில் சிந்திக்கும் திறன் அவருக்கு இல்லையென்றால் அது கவலைக்குரிய விடயமாகும். பொதுச் சின்னத்தில் பொதுக் கூட்டணியின் கீழ் நாம் பொதுத் தேர்தலில் களமிறங்குவோம்-என்றார். (அ)

# வெள்ளை சீனி இறக்குமதியை உடனடியாக மட்டுப்படுத்துக!

## ஜனாதிபதியிடம் சீனி உற்பத்தி தொழிற்சாலை நிர்வாகம் கோரிக்கை

கொழும்பு, செப். 30

உள்ளூர் சீனி உற்பத்தி தொழிற்சாலைகளில் ஏற்பட்டுள்ள கடும் நிதி நெருக்கடி காரணமாக நாட்டுக்குள் வெள்ளை சீனி இறக்குமதியை மட்டுப்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் சீனி உற்பத்தி தொழிற்சாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஏற்கெனவே இலாபத்தில் இயங்கி வந்த 4 உள்ளூர் சீனி உற்பத்தி தொழிற்சாலைகளில் தற்போது கடும் நிதி நெருக்கடியால் நீடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், சீனி உற்பத்தி தொழிற்சாலை நிர்வாகம் கூறியுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சீனிக்கு வற் வரி மற்றும் சமூக பாதுகாப்பு வரிகளிலிருந்து அரசாங்கம் விலக்களித்து, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சிவப்பு சீனிக்கு மாத்திரம் அந்த வரிகளை விதித்ததே இதற்கு முக்கிய காரணமெனவும், சீனி உற்பத்தி தொழிற்சாலை நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலைமை காரணமாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சிவப்பு சீனி ஒரு கிலோவின் விலை 325 ரூபா முதல் 350 ரூபாவரையிலும் இறக்குமதி செய்யப்படும் வெள்ளை சீனி ஒரு கிலோவின் விலை 225 ரூபா முதல் 250 ரூபாவரையிலும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் 100 வீதம் அரசாங்கத்துக்கு சொந்தமான செவனகல மற்றும் பெல்வத்த சீனி உற்பத்தி தொழிற்சாலைகளின் கீழ் சுமார் 1,500 தொழிலாளர்களும், 35,000 கரும்பு விவசாயக் குடும்பங்களும் உள்ளதாகவும் 51 தனியார் துறையினரால் நடத்தப்படும் நான்கு உள்ளூர் உற்பத்தி தொழிற்சாலைகள் கல்ஓயா மற்றும் எதிமலே ஆகியவற்றின் கீழுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையால் நிறுவன ஊழியர்களுக்கும், கரும்பு விவசாயிகளுக்கும் சம்பளம் வழங்க முடியாமல் தங்களது நிறுவனங்கள் கடும் நிதி நெருக்கடியில் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கு தீர்வாக இறக்குமதி செய்யப்படும் வெள்ளை சீனிக்கு உடனடியாக வற் மற்றும் சமூக பாதுகாப்பு வரியை விதித்து வெள்ளை சீனி இறக்குமதியை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் உள்ளூர் சீனி தொழிற்சாலை நிர்வாகம் கோரியுள்ளது.

தற்போது இலங்கையில் மாதாந்த நுகர்வு சுமார் 30,000 மெற்றிக்தொன்னாக காணப்படுகிறது. அதேவேளை உள்ளூர் சிவப்பு சீனி உற்பத்தி வருடத்துக்கு சுமார் 120,000 மெற்றிக்தொன்னாகும். கடந்த நான்கு மாதங்களில் மட்டும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை சீனியின் அளவு 256,000 மெற்றிக்தொன் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ரணில்-சஜித் கூட்டணி; சின்னத்தால் இழுபறி!

கொழும்பு, செப். 30

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கிடையிலான கூட்டணி அமைப்பது தொடர்பான பேச்சு சாதகமாக முடிவடைவதற்குரிய சாத்தியம் காணப்படுவதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

பொதுத்தேர்தலில் களமிறங்கவேண்டிய சின்னம் தொடர்பிலேயே இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று முன் தினம் மூன்றாவது நாளாகவும் இடம்பெற்றது.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியில் மாற்றம் வேண்டும் என்ற கோரிக்கை சஜித் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடப் போவதில்லை, தேசியப் பட்டியலிலும் வரப்போவதில்லை என ரணில் அறிவித்துவிட்டதால், தலைமைப்பதவியில் மாற்றம் அவசியமில்லை என ஐ.தே.க. தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அடுத்தது பொதுத்தேர்தலில் தொலைபேசிச் சின்னத்தில் களமிறங்கும் யோசனையை ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ளது. அவ்வாறு செய்தால் அது தமது தரப்பு அரசியல் அடையாளத்துக்கு பாதகம் என்பதால் பொது சின்னத்தில் களமிறங்கும் யோசனை ஐ.தே.க தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் வேட்பாளராக சஜித்தை ஏற்பதற்கும் ஐ.தே.க பச்சைக்கொடி காட்டியுள்ளது. எனவே, சின்னம் இறுதியானால் கூட்டணி பேச்சு வெற்றியளிக்கும் என ஐ.தே.க. உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பான இறுதிப் பேச்சு நேற்று இரவு நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வங்கி ஆண்டு நிறைவுக்கு பரிசு தருவதாக கூறி பணம் மோசடி!

## உக்ரைன் பிரஜைகள் இருவர் கைது!!

கொழும்பு, செப். 30

தனியார் வங்கி ஒன்றின் ஆண்டு நிறைவுக்கு பரிசுகள் தருவதாக பேஸ்புக்கில் விளம்பரம் செய்து இரண்டு மில்லியன் ரூபாவிற்கும் மேல் மோசடி செய்த உக்ரைன் பிரஜைகள் இருவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் தனியார் வங்கி ஒன்றின் ஆண்டு நிறைவை முன்னிட்டு பரிசுகள் வழங்கப்படவுள்ளதாக கடந்த சில நாட்களாக பேஸ்புக்கில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

விளம்பரத்தைப் பார்க்கும் நபர்களின் வங்கிக் கணக்குத் தகவல் உட்பட பல தனிப்பட்ட தகவல்கள் அதில் இணைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பிரவேசிக்கும் நபர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்ட பணத்தை ஒரு குழுவினர் மீளப்பெறுவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணைப் பிரிவினருக்கு இரகசியத் தகவல் கிடைத்திருந்தது.

இதன்படி, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், உனவட்டுன பிரதேசத்தில் இருந்து இந்த மோசடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் விடயத்தை கண்டறிந்துள்ளனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த விசாரணை அதிகாரிகள் அங்கு சென்று 2 பேரை கைது செய்தனர்.

கைதான இருவரும் உக்ரைன் பிரஜைகள் என்பது தெரியவந்துள்ளது.

கடந்த 5 நாட்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்துள்ள இவர்கள், டெலிகிராம் குழு ஒன்றின் ஊடாக இந்த மோசடி செயலை மேற்கொண்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியவரிடம் பதவியை கையளிக்கும் ரில்வின்!

**பொதுத் தேர்தலுக்கு பின் மாற்றம்**



கொழும்பு, செப். 30

**“நான்சாகும்வரை ஜே.வி.பிகாரன்தான். இதில் மாற்றம் எதுவும் வராது. ஆனால் மரணிக்கும்வரை பதவியில் நீடிக்கவேண்டும் என்றில்லை. பொதுச்செயலாளர் பதவியை மற்றுமொரு புதியவர் ஒருவருக்கு வழங்க எதிர்பார்த்துள்ளேன்.”**

-இவ்வாறு ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா பிபிசி சிங்கள சேவைக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத்தேர்தல் முடிந்ததும், அடுத்த வருடம் கட்சி மாநாட்டை நடத்தி இதற்குரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் கூறினார்.

1978 ஆம் ஆண்டு ஜே.வி.பியில் இணைந்த ரில்வின் சில்வா, 1995 ஆம் ஆண்டு ஜே.வி.பியின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அன்று முதல் இன்று வரை 29 வருடங்களாக அப்பதவியில் அவர் நீடிக்கின்றார்.

கட்சிச் செயற்பாடுகள் காரணமாக சிறைவாசமும் அனுபவித்துள்ளார்.

ஜே.வி.பிக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டு, அக்கட்சியினர் ஜனநாயக வழிக்கு திரும்பிய பின்னர், கட்சியை மீளக் கட்டியெழுப்புவதில் ரில்வின் சில்வாவின் பங்களிப்பு அளப்பரியது.

ஜே.வி.பி. அரசியல் ரீதியாக பின்னடைவுகளை சந்தித்தவேளைகளியெல்லாம் கட்சி தோழர்களை உற்சாகப்படுத்தி கட்சியை ஒரு கட்டுப்கோப்பாக வழிநடத்தியவர்களில் ரில்வின் சில்வா பிரதானமானவர்.

ஜே.வி.பிக்குள் உள்ளக மோதல்கள் வெடித்த சந்தர்ப்பங்களில் கட்சி கட்டமைப்பு சிதைவடையக்கூடாது என்பதற்காக பல தியாகங்களை செய்தவர்.

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகியுள்ளார்.

இந்நிலையில் அநுரவை போலவே பலரும் ரில்வின் சில்வாவை பற்றியும் தேட ஆரம்பித்துள்ளனர்.

பிபிசிக்கு வழங்கிய நேர்காணலின் அவர் தனது கடந்த காலம் பற்றியும் விபரித்துள்ளார். இதன்போது இன்னும் எத் தனை வருடங்கள் ஜே.வி.பியின் பிரதான செயலாளராக இருக்கின்றீர்கள் எனக் கேள்வி எழுப்பட்டது,

இதற்கு பதிலளித்த அவர், “நான் சாகும்வரை ஜே.வி.பிகாரன்தான். உடலில் உயிர் இருக்கும்வரை அரசியலிலும் ஈடுபடுவேன்.

ஆனால் மரணிக்கும்வரை பதவி வகிக்கவேண்டும் என்றில்லை.

நீண்ட காலம் செயலாளர் பதவியில் இருந்துவிட்டேன், புதியவர் வரவேண்டும் எனக் கருதுகின்றேன். உடனடி மாற்றத்தை கட்சி தோழர்கள் விரும்பவில்லை.

பொதுத்தேர்தல் முடிந்த பிறகு, மாநாட்டை நடத்தி இதனை செய்யலாம். சிறப்பாக செயற்படக்கூடிய தோழர்கள் உள்ளனர்.” - என்றார் ரில்வின் சில்வா.

அதேவேளை, அரசாங்கத்தில் எவ்வித பதவியையும் தான் ஏற்கமாட்டார் எனவும் அவர் கூறியுள்ளார். (அ)

## சிமெந்து மூலப்பொருட்கள் மேலே விழுந்து ஒருவர் பலி!

கொழும்பு, செப். 30

அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் ஒப்பந்த நிறுவனமொன்றில் பணிபுரிந்த சாரதி ஒருவர் லொறிகளில் சிமெந்து மூலப்பொருட்களை ஏற்றிக் கொண்டிருந்தபோது சிமெந்து மூலப்பொருட்கள் மேலே விழுந்து உயிரிழந்துள்ளதாக துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் லுனுகம்வெஹரவின் தென் கரையில் உள்ள ஜனுதான கிராமத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் சிமெந்து தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களை வீல் லோடர் மூலம் லொறிகளில் ஏற்றிக்கொண்டிருந்தபோது, மூலப்பொருட்கள் வீல் லோடர் மீது விழுந்ததாக பொலிஸார் கூறினர்.

விபத்து இடம்பெற்றபோது அருகில் இருந்த லொறி சாரதிகள் காயமடைந்த நபரை அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார். (அ)

## வாகனத் திருட்டு, பண மோசடி இருவர் பொலிஸாரினால் கைது!

கொழும்பு, செப். 30

கிரிபத்கொட பகுதியில் வைத்து பண மோசடியில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் நபரொருவரை கிரிபத்கொட பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்தில் 37 வயதுடைய கந்தானை பகுதியைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், போலி ஆவணங்களை தயாரித்து 130,000,00 ரூபாவுக்கு கார் ஒன்றை விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது. குறித்த சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில் இவருடன் இந்த மோசடி நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியதாக தெரிவிக்கப்படும் மேலும் ஒரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பமுனுகம பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில், நாட்டின் பல பகுதிகளிலும் வீடு கொள்வனவு, விற்பனை மற்றும் புதிதாக வீடு கட்டுதல் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு பலரை ஏமாற்றி பண மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களுக்கு எதிராக வெலிசர மற்றும் புதுக்கடை நீதிமன்றங்களில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (அ)



## பயணித்துக்கொண்டிருந்த பஸ்ஸில் கழன்று சென்ற இரண்டு சக்கரங்கள்!

கொழும்பு, செப். 30

பண்டாரவளை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் நேற்று முன்தினம் சனிக்ழமை மாலை வெலிமடை-பொரலந்த வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது திடீரென பஸ்ஸின் பின்புற இரண்டு சக்கரங்களும் கழன்று சென்ற நிலையில் பாரிய விபத்து பஸ் சாரதியினால் தடுக்கப்பட்டதாக பஸ்ஸில் பயணித்த பயணிகள் தெரிவித்தனர்.

குறித்த பஸ் பயணிக்கும் போது அதில் 20 பேர் வரை இருந்ததாகவும் பஸ்ஸை சாரதி நிறுத்தாவிட்டால் பாரிய பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகி இருக்கக்கூடும் எனவும் பஸ்ஸில் பயணித்தவர்கள் மேலும் கூறினர். (அ)

## மதுப் போத்தலை கையூட்டாக பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் சிக்கினார்!

கொழும்பு, செப். 30

மதுபான போத்தல் ஒன்றை கையூட்டலாக பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தருடன் துப்புரவுப் பணியாளர் ஒருவரும் புதுக்கடை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து கைதானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பசறை பகுதியைச் சேர்ந்த ஒருவரினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பாராளுமன்ற தேர்தலில் தனித்து களமிறங்குகிறார் நஸீர் அஹமட்

கொழும்பு, செப். 30

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவரது ஜனநாயக ஐக்கிய முன்னணி சார்பில் களமிறங்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர், முன்னாள் சுற்றாடல் அமைச்சர் மற்றும் வடமேல் மாகாண ஆளுநர் பதவிகளை வகித்த நஸீர் அஹமட், கிழக்கு மாகாணத்தை பூர்வீகமாக கொண்டவர். கடந்த காலங்களில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும் அவர் ஜனநாயக ஐக்கிய முன்னணி எனும் பெயரிலான அரசியல் கட்சியை வைத்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய முன்னணி, இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் தனித்துமாக போட்டியிட ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. கடந்த காலங்களில் கறைபடியாத அரசியல் செயற்பாடுகளை மேற்கொண்ட, செயற்றிறன் மிக்க அரசியல்வாதிகள் பலரும் ஜனநாயக ஐக்கிய முன்னணியில் இணைந்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில அரசியல்வாதிகளும் தமது கட்சியில் இணைந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளபோதும், பொதுமக்களின் அதிருப்திக்குள்ளான-நாட்டின் நலனை பாதிக்கும் வகையில் கடந்த காலச் செயற்பாடுகளை கொண்ட எந்தவொரு அரசியல்வாதிக்கும் தமது கட்சியில் இடமளிக்கப் பட மாட்டாதென ஜனநாயக ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் இஸட்.ஏ.ஹிதாயத்துல்லா அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ)

## மரக்கறி விலை வீழ்ச்சி

கொழும்பு, செப். 30

சந்தையில் மரக்கறிகளின் விலைகள் சற்று வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

இதன்படி கரட், போஞ்சி, கோவா, வெண்டிக்காய் மற்றும் பூசணிக்காய் உள்ளிட்ட மரக்கறிகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய கொழும்பு மனிங் சந்தையில் ஒரு கிலோகிராம் போஞ்சி 200 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் கரட் 150 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அத்துடன் ஒரு கிலோகிராம் கோவா 220 ரூபாவிற்கும், ஒரு கிலோகிராம் கத்தரிக்காய் 200 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றது. (அ)

## பிரமுகர்களுக்கு வழங்கப்படவேண்டிய பாதுகாப்பு குறித்து கலந்துரையாடல்

கொழும்பு, செப். 30

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரமுகர்களுக்கான பாதுகாப்பு குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக இன்று கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

இதேவேளை, தற்போது பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள பிரமுகர்களுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களை நிறுத்தக்கூடாது!

## தேர்தல் ஆணைக்குழுவிடம் காஞ்சன கோரிக்கை



**கொழும்பு, செப். 30**

**பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களை நிறுத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கக்கூடாது என முன்னாள் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.**

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர்- தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, கடந்த அரசாங்கத்தின்போது ஆரம்பிக்கப்பட்ட பல வேலைத் திட்டங்களை மீள முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் மானியம், உர மானிய தொகை அதிகரிப்பு மற்றும் இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சூரிய படலங்களைப் பகிர்ந்தளித்தல் உள்ளிட்ட செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு புதிய ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் தேர்தல் காரணமாக, தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அவை நிறுத்தப்பட்டன.

எனினும் தற்போது பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், மீண்டும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டங்களை நிறுத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கக் கூடாது என கோரிக்கை விடுக்கிறோம்.

குறிப்பாகக் கடந்த அரசாங்கத்தில் கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு திறைசேரியின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டது.

எனினும் தேர்தல்கள் காலப்பகுதியில் குறித்த பணிகளை முன்னெடுக்க வேண்டாமென நிதியமைச்சுக்கும் கடற்றொழில் அமைச்சுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கடிதம் அனுப்பப்பட்டது.

அந்த பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவை நிறுத்தப்படக் கூடாது.

ஜனாதிபதித் தேர்தலின் போது குறித்த நிவாரணங்கள் நிறுத்தப்பட்டமையினால் கடற்றொழிலாளர்கள் உள்ளிட்ட பலரும் பாதிப்படைந்தனர்.

அவை தொடர்ந்தும் செயற்படுத்தப்பட வேண்டும்-என்றார். (அ)

# தளபாட தொழிற்சாலையில் தீ!

கொழும்பு, செப். 30

மொறட்டுவை எட்வர்ட் மாவத்தையில் அமைந்துள்ள மர தளபாட தொழிற்சாலையில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் திடீரென தீ பரவியதாக மொரட்டுவ நகரசபை தீயணைப்பு பிரிவின் பொறுப்பதிகாரி நளீன் துல்சிறி குமார தெரிவித்தார்.

தீ விபத்து குறித்து தகவல் கிடைத்ததும் அந்த இடத்திற்கு பொறுப்பான அதிகாரிகள் உள்ளிட்ட தீயணைப்பு வீரர்கள் தண்ணீர் பவுசருடன் சம்பவ இடத்துக்கு சென்று பெரும் அழிவை தடுத்ததாக அவர் கூறினார். (அ)

# நாணய நிதியத்தின் ஆதரவுடன் திட்டங்கள் பாதிப்பின்றி நடக்கும்

## தேசிய மக்கள் சக்தி கருத்து

கொழும்பு, செப். 30

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் தேசிய மக்கள் சக்தி அதனை தொடரும். எனினும் திட்டத்தின் நோக்கங்களை வேறுஅணுகுமுறையின் ஊடாக அடைவதற்கு முயலும் என தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார பேரவையின் தலைவர் பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களின் அனுகுமுறையிலிருந்து வேறுபட்ட அணுகுமுறையை பின்பற்றும் என அவர் கூறினார்.

பொருளாதார சுமைகளை நியாயமான விதத்தில் பகிர்ந்து கொள்ளும்,வலுவான நிதி ஒருங்கிணைப்பை உறுதி செய்யும் வருமான நடவடிக்கைகளை நாங்கள் சமர்ப்பிப்போம் என அவர் குறிப்பிட்டார்.

முன்னைய அரசாங்கத்தின் அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்களை சீர்திருத்தும் நடவடிக்கைகள் தனியாருக்கு நன்மையளிக்கும் வகையில் காணப்பட்டன. ஆனால் புதிய அரசாங்கம் பொதுமக்களின் நலனை அடிப்படையாக வைத்து இவற்றை மறுசீரமைக்கும் என பேராசிரியர் அனில் ஜயந்த கூறினார். (அ)

# ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு



கொழும்பு, செப். 30

தங்களது அரசாங்கத்தின் அதிகாரிகளுக்கு எதிராக முன்வைக்கப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் முறையான விசாரணையின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மல்வத்து - அஸ்கிரிய பீடத்தினரைச் சந்தித்து ஆசி பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய அரசாங்கத்தின் கீழ், உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள பல அதிகாரிகள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

தற்போது, வெளியிலிருந்து அரச அதிகாரிகளைக் கொண்டு வருவதற்கு முடியாது.

எனவே, தற்போதுள்ள அதிகாரிகளைக் கொண்டு, முகாமை செய்து நாம் கடமைகளை முன்னெடுத்து வருகிறோம்.

எவ்வாறாயினும், குறித்த அதிகாரிகள் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுத்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

# கோப்பாயில் கலாசாலை நிறுவிய நாள் விழா

யாழ்ப்பாணம், செப். 30

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 101 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கலாசாலை தின விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவரும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய திருமதி. ஜமுனா ராஜசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

கலாசாலை நிறுவுவதற்கு நிலத்தை வழங்கிய சேர் பொன் இராமநாதனை கௌரவப்படுத்தும் வகையில் இராமநாதன் நினைவுப் பேருரை இடம்பெறவுள்ளது.

"ஆசிரிய கல்வியியலாளர்களின் தத்துவ ஆராய்ச்சிப் பட்டங்கள் தொடர்பில் மேற்கிளம்பும் சவால்களும் அவற்றை தாண்டிப் பயணித்தலும் " என்ற பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நினைவுப் பேருரை ஆற்றுவார். (அ)

# பிரான்ஸிலிருந்து வந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப். 30

யாழில், மனவிரக்தியடைந்த குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார். இருபாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த விஜயரட்ணம் யோகேஸ்வரன் (வயது 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நீண்ட காலத்திற்கு பின்னர் பிரான்ஸில் இருந்து ஊருக்கு வந்துள்ளார். இவரது 3 பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர். மன விரக்தியில் இருந்த இவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர் மாய்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# கடத்தப்பட்ட கார் மீட்பு

கொழும்பு, செப். 30

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் கடந்த 28 ஆம் திகதி காலை திருடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கார் ஒன்று மாவனல்லை பிரதேசத்தில் உள்ள தனியார் வங்கிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

அத்துடன், சந்தேக நபர் ஒருவரையும் மாவனல்லை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாவனல்லை பொலிஸ் அதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று குறித்த இடத்துக்குச் சென்று அங்கிருந்த சாரதியிடம் விசாரணைகளை மேற்கொண்டபோதும் சந்தேக நபரால் வாகனத்தின் அடையாளத்தை உறுதிப்படுத்த முடியவில்லை.

இதனை அடுத்து சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர். கண்டி வத்தகேகெதர பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டார்.

அவர் போதைப்பொருளுக்கு அடிமையாகி இருப்பதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# யானை தாக்கி பெண் பலி!

கொழும்பு, செப். 30

மஹியங்கனை பகுதியில் காட்டு யானை தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் திக்கொட சேரானகம பகுதியை சேர்ந்த 80 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று காலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காட்டு யானை தாக்கிய பெண் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹியங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தலைவர் பதவியிலிருந்து ரணில் விலகவேண்டும்!

## சம்பிக்க ரணவக்க கோரிக்கை



கொழும்பு, செப். 30

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணி அமைக்க விரும்பினால், ரணில் விக்கிரமசிங்க தலைவர் பதவியிலிருந்து விலகவேண்டும் என கோரப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் ருவான் விஜேவர்தன ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் எனவும் ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒப்பிடுகையில், சிறிய அரசியல் சக்தியாக உள்ள ஐக்கிய தேசியக் கட்சியே தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பை ஏற்க வேண்டுமா என்பதை ஐக்கிய மக்கள் சக்தி தான் தீர்மானிக்க வேண்டும் என்று அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுச்சின்னத்தில் போட்டியிடுவதற்கு இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி தயார்!

## காரைதீவு கிளைக்கூட்டத்தில் தீர்மானம்



காரைதீவு, செப். 30

**இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பொதுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு தயார் என்று அறிவித்துள்ளது.**

தமிழ் அரசுக் கட்சியின் காரைதீவுக் கிளைக் கூட்டமானது பிரதேசக் கிளைத் தலைவரும், முன்னாள் தவிசாளருமான கி. ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றபோதே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதில் கட்சிக்கிளையின் தலைவர், செயலாளர், பொருளாளர், ஒவ்வொரு வட்டார பிரதிநிதிகள், வட்டார அங்கத்தவர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஏகமனதாக இம்முறை தேர்தலிலே அம்பாறை மாவட்டத்தில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை பெற ஒரு பொதுச் சின்னத்தில் போட்டியிட வேண்டுமென்று அம்பாறை மாவட்ட மக்களால் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

நாமும் அதற்காக தயாராக இருக்கின்றோம்.

அதேவேளை, ஏனைய கட்சிகள் அம்பாறை மாவட்டத்தில் பிரதிநிதித்துவத்தை பெறுவதற்காக போட்டியிடுமாக இருந்தால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பாக நாங்களும் போட்டியிட நேரிடும் என்பதையும் அம்பாறை மாவட்டத்தில் பொதுச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று கருத்து கூறுகின்ற புத்திஜீவிகளுக்கு பகிரங்கமாக அறிவிக்கின்றோம் என்று அந்தக் கட்சி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (எ)




# பாடசாலை மாணவர்களுக்கு வாழ்க்கைத்திறன் பயிற்சிகள்

மட்டக்களப்பு, செப். 30

மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய மாணவர்களுக்கு மட்டக்களப்பு விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் வாழ்க்கைத்திறன் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறை நேர்மறை எண்ணங்கள் மற்றும் ஊக்கப்படுத்தல் ஆகிய தலைப்பின் கீழ் விவேகானந்த கல்லூரியின் பணிப்பாளர் க. பிரதீஸ்வரனின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அதிபர் மற்றும் விவேகானந்தா சமுதாய அறக்கட்டளையின் முகாமையாளர் மற்றும் கல்லூரி சேவையாளர்கள் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

செயல்பாடு மற்றும் விளையாட்டுக்கள் மூலம் வாழ்க்கைத் திறன் பயிற்சி வழங்கப்பட்டன.



# வளத்தாப்பிட்டி கிளினிக் நிலையம் மக்கள் பாவனைக்கு திறக்கப்பட்டது

கல்முனை, செப். 30

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்துக்குட்பட்ட சம்மாந்துறை, வளத்தாப்பிட்டி கிளினிக் நிலையம் மீள் புனரமைப்பு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன் கலந்து கொண்டு கிளினிக் நிலையத்தை திறந்து வைத்தார்.

வளத்தாப்பிட்டியில் நடைபெற்ற நடமாடும் மருத்துவ முகாம் ஒன்றுக்கு சென்றபோது, சந்திரசேகரன் என்பவரின் உதவியுடன் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ். ஐ. எம். கபீர், மருத்துவர் திருமதி ஜீவா ஆகியோர் வன்னி எயுட்ஸ் எனப்படும் கனடிய தொண்டு நிறுவனத்தை தொடர்பு கொண்டு முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க லவ் ட்றஸ்ட் நிறுவனத்தின் இணை அனுசரணையுடன் 1. 6 மில்லியன் ரூபாய் நிதிப் பங்களிப்பில் இந்த கிளினிக் நிலையம் புனரமைப்பு செய்யப்பட்டது.

இதன் கட்டுமானப் பணிகளை இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர். (எ)

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அம்பாறையில் தனித்துப் போட்டி

அம்பாறை, செப். 30

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயல்குழுவினருடன் கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.



கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் தீர்மானத்தை ஏற்று அம்பாறை மாவட்ட ஆதரவாளர்களை சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்க செய்த கட்சித் தொண்டர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவும், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாக ஆராய்வதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடல் மாளிகைக்காடு பாவா ரோயலி வரவேற்பு மண்பத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்திருந்ததுடன், வேட்பாளர்கள் தெரிவு மற்றும் தேர்தல் செயல்பாடுகள் போன்றவை குறித்து அம்பாறை மாவட்ட பேராளர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டிருந்தன.

கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீனின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இந்த சந்திப்பில் கட்சியின் தவிசாளர் அமீர் அலி, கட்சியின் தேசிய கொள்கை பரப்பு செயலாளரும் அம்பாறை மாவட்ட செயல்குழு தலைவருமான கே. எம். ஏ. ஜவாத் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட செயல்குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# எட்டு துப்பாக்கி ரவைகளுடன் திருக்கோவிலில் ஒருவர் கைது

திருக்கோவில், செப். 30

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள விநாயகபுரம் பகுதியில் சட்டவிரோதமாக துப்பாக்கி ரவைகளை வைத்திருந்த 54 வயதுடைய ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் விநாயகபுரம் 4ஆம் பிரிவிலுள்ள காயத்திரி கிராமம் பகுதியிலுள்ள இந்த நபரின் வீட்டை முற்றுகையிட்டு சோதனையிட்டனர்.

இதன்போது பாவிக்கக்கூடிய செட்கண் ரக துப்பாக்கியின் 5 ரவைகள் உட்பட 8 ரவைகளை கைப்பற்றியதுடன் ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் 54 வயதுடையவர் எனவும் இவர் காட்டுமிருகங்களை வேட்டையாடி வருபவர் எனவும் தெரியவந்துள்ளது.

அத்தோடு, இந்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# இரண்டு வாள்களுடன் கைதான இளைஞன் பிணையில் விடுவிப்பு

ஆரையம்பதி, செப். 30

மட்டக்களப்பு, ஆரையம்பதி பிரதேசத்தில் இரண்டு வாள்களுடன் கைது செய்யப்பட்ட 25 வயது இளைஞனை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் பிணையில் விடுவித்துள்ளார்.



மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆரையம்பதி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 3 அடி நீளம் கொண்ட இரண்டு வாள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டு காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட இருவரில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவரை பொலிஸார் விடுவித்த நிலையில், மற்றையவரை மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது நீதிவான் அவரை பிணையில் விடுவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனமழை, வெள்ளப் பெருக்கால் நேபாளத்தில் 40 பேர் உயிரிழப்பு



காத்மண்டு, செப். 30

**நேபாளத்தில் கொட்டித்தீர்த்த கனமழையால் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அங்கு தொடர்ந்து பெய்யும் கனமழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதில் சிக்கி இதுவரை 40 பேர் உயிரிழந்தனர், 11 பேரை காணவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.**

நேபாளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் கனமழை பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்படலாம் என பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர். இதன்படி பல இடங்களில் வெள்ளம் சூழ்ந்தது. தலைநகர் காத்மண்டுவில் 226 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின. இங்கு 9 பேரும், லலித்பூரில் 16 பேரும், பக்தாபூரில் 6 பேரும் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தனர்.

மற்ற இடங்களிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டன. இதுவரை நேபாளத்தில் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளது. பலரை காணவில்லை. வெள்ளம் பாதித்த பகுதிகளில் நேபாளம் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த 3,000 வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடன் உள்ளூர் மக்களும் இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (எ)

# ஈரான் ஆன்மீக தலைவர் ஐயத்துல்லா பாதுகாப்பான இடத்தில் தங்கவைப்பு



தெஹ்ரான், செப். 30

ஈரான் நாட்டின் உயர் தலைவராக அறியப்படும் ஐயத்துல்லா அலி கமேனி பாதுகாப்பான இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளார்.

இஸ்ரேல் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் கொல்லப்பட்டதன் எதிரொலியாகவே ஈரான் நாட்டின் ஆன்மீக தலைவர் ஐயத்துல்லா உச்சபட்ச பாதுகாப்புடன் உள்நாட்டிலேயே பாதுகாப்பான இடத்தில் தங்கவைப்பட்டுள்ளதாக தெஹ்ரானின் அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

லெபனானின் ஹிஸ்புல்லாக்கள் மற்றும் உள்ளூர் ஆயுதக் குழுக்களுடன் தொடர்ச்சியாக ஈரான் தொடர்பில் இருந்து வந்தது. இந்த நிலையில், தெற்கு லெபனானில் வெள்ளிக்கிழமை நடந்த வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவர் சையது ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்ததைத் தொடர்ந்து ஐயத்துல்லா அலி கமேனி பாதுகாப்பான இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக, பெய்ரூட்டில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவர் சையது ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இது குறித்து இஸ்ரேல் இராணுவம் அதன் எக்ஸ் பக்கத்தில், "சையது ஹசன் நஸ்ரல்லா இனி தீவிரவாதத்தால் உலகை அச்சுறுத்த முடியாது" என்று தெரிவித்திருந்தது. (எ)




# "லெபனான் மிகவும் மோசமான காலகட்டத்தை எதிர்கொள்கிறது"

பெய்ரூட், செப். 30

"லெபனான் மிகவும் மோசமான காலகட்டத்தை எதிர்கொள்கிறது" என்று ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் - ஹிஸ்புல்லா இடையே மோதல் அதிகரித்து வரும் நிலையில், ஹிஸ்புல்லாவுடனான போர் நிறுத்தத்துக்கான உலகளாவிய அழைப்புகளை இஸ்ரேல் நிராகரித்துள்ளது. இந்த நிலையில்,

லெபனானில் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள இஸ்ரேல், தரைவழித் தாக்குதலுக்கும் தயாராகி வருகிறது. லெபனானில் உள்ள ஐ. நா. மனிதாபிமான ஒருங்கிணைப்பாளர் இம்ரான் ரிசா கூறுகையில், "லெபனான் தற்போது பல தசாப்தங்களில் இல்லாத கொடூரமான போரை எதிர்கொள்கிறது. ஒரு தலைமுறையில் லெபனானில் மிகவும் மோசமான காலகட்டத்தை நாங்கள் காண்கிறோம். நெருக்கடி இன்னும் மோசமடையக் கூடும். இது ஆரம்பம் என்று பலர் தங்கள் அச்சத்தை வெளிப்படுத்துகிறார்கள்" எனக் கூறினார்.

இதேவேளை, லெபனானில் இஸ்ரேல் நடத்தியத் தாக்குதலில் நேற்றுக் காலை 25 பேர் உயிரிழந்தனர். இதனால் ஒரு வாரத்தில் மட்டும் 800 பேர் வரை உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர். (எ)

# சீனாவின் புதிய அணு சக்தி நீர்மூழ்கி கடலில் மூழ்கியது

வாஷிங்டன், செப். 30

சீனாவின் புதிய அணு சக்தி நீர்மூழ்கி முழுமையாக கடலில் மூழ்கியது.

சீன கடற்படையில் 234 போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிகள் உட்பட 370 கப்பல்கள் உள்ளன. அந்த நாட்டு கடற்படையில் மொத்தம் 60 நீர்மூழ்கிகள் உள்ளன. இதில்12 நீர்மூழ்கிகள் அணு சக்தியில் இயங்கக்கூடியவை.

இந்த நிலையில், கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் சீன கடற்படையின் நீர்மூழ்கி கடலுக்கு அடியில் பாறையில் மோதியது. இதில் மொத்தம் 55 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்து, உயிரிழப்பு குறித்து சீன அரசு இதுவரை அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. இந்தச் சூழலில் சீனாவின் புதிய அணு சக்தி நீர்மூழ்கி முழுமையாக கடலில் மூழ்கியுள்ளது. இதுகுறித்து அமெரிக்க பாதுகாப்புத் துறை அதிகாரிகள் கூறுகையில்,

சீனாவின் வூஹான் நகர் அருகே அந்த நாட்டின் கப்பல் கட்டுமான தளம் உள்ளது. கடந்த



மார்ச் மாதம் சீன கடற்படையின் புதிய அணு சக்தி நீர்மூழ்கி வூஹான் தளத்தில் நங்கூரமிட்டிருந்தது. அமெரிக்காவின் மேக்சர் டெக்னாலஜிஸ் நிறுவனம் கடந்த மார்ச் 10ஆம் திகதி எடுத்த செயற்கைக்கோள் படத்தில் சீன நீர்மூழ்கி இடம்பெற்றிருந்தது. கடந்த மே 16ஆம் திகதி அமெரிக்காவின் பிளானட் லேப்ஸ் எடுத்த செயற்கைக்கோள் படத்தில் சீன நீர்மூழ்கியை காணவில்லை. அந்த நீர்மூழ்கி கடந்த மே அல்லது ஜூன் மாதத்தில் கடலில் முழுமையாக மூழ்கியுள்ளது.

அணு எரிபொருள் இருந்திருந்தால் நிச்சயமாக கதிர்வீச்சு ஏற்பட்டிருக்கும். புதிய அணு சக்தி நீர்மூழ்கி கடலில் மூழ்கியதை சீன அரசு இதுவரை மறைத்து வருகிறது. சீன நீர்மூழ்கிகளின் வலிமை கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது" இவ்வாறு அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# "ஆசீர்வாதம், சாபம்" இந்தியா, ஈரான் வரைபடங்களுடன் நெதன்யாகு உரை




நியூயோர்க், செப். 30

காஸா போருக்குப் பின்பு முதல்முறையாக ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, மத்திய கிழக்கு பகுதியில் நிலவும் மோதலுக்கு ஈரான் தான் காரணம் என்று குற்றஞ்சாட்டினார். அப்போது, அவர் தனது கைகளில் இரண்டு வரைபடங்களை வைத்திருந்தார். அந்த வரைபடங்களில் ஒரு சில நாடுகள் "சபிக்கப்பட்டவை" என்றும், சில நாடுகள் "ஆசீர்வதிக்கப்பட்டவை" என்றும் குறிப்பிடப்பட்டிருந்தன.

இதில் பலஸ்தீன பகுதியான மேற்கு கரை மற்றும் காஸா இஸ்ரேலின் பகுதியாக குறிப்பிடப்பட்டிருந்தன. இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவின் வலது கையில் இருந்த வரைபடத்தில் ஈரான், ஈராக், சிரியா மற்றும் ஏமன் நாடுகள் இடம்பெற்றிருந்தன. அவைகள் கறுப்பு நிறத்தில் சுட்டிக்காட்டப்பட்டு "சபிக்கப்பட்டவை" என்று குறிப்பிடப்பட்டிருந்தன. இடது கையில் வைத்திருந்த வரைபடத்தில் எகிப்து, சூடான், சவுதி அரேபியா, மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இடம்பெற்றிருந்தன. அவை பச்சை நிறத்தில் சுட்டிக்காட்டப்பட்டு, "ஆசீர்வதிக்கப்பட்டவை" என்று குறிப்பிடப்பட்டிருந்தன. அத்தோடு, சிரியாவின் கோலன் ஹைட்ஸ் பிராந்தியம் இஸ்ரேலின் பகுதியாக குறிப்பிடப்பட்டிருந்தது.

நெதன்யாகு தனது உரையில், "நான் ஈரானுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் எங்களைத் தாக்கினால் நாங்களும் உங்களைத் தாக்குவோம். இஸ்ரேலின் நீண்ட கரம் செல்ல முடியாத இடமென ஈரானில் ஒன்றுமே இல்லை. இது முழு மத்திய கிழக்கு நாடுகளுக்கும் பொருந்தும்" என்றார். (எ)

# ஐ. நா. பாதுகாப்பு அவையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்

## பிரிட்டன் பிரதமர் ஆதரவு

நியூயோர்க், செப். 30

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு அவையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் வழங்கப்பட வேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் வலியுறுத்தியுள்ளார்.

ஐ. நா. பொதுச் சபையில் உரையாற்றிய கெய்ர் ஸ்டார்மர், "ஐ. நா. பாதுகாப்பு அவை விரிவுபடுத்தப்பட வேண்டும். அரசியல் காரணமாக அது முடக்கப்படக்கூடாது. ஐ. நா. சீர்திருத்தப்பட வேண்டும். அதிக பிரதிநிதித்துவத்துடன், அதிகம் பதிலளிக்கக்கூடியதாக அது திகழ வேண்டும்.

நியாயமான விளைவுகளுக்கு மட்டுமல்ல, அவற்றை அடைவதில் நியாயமான பிரதிநிதித்துவத்தையும் நாங்கள் உருவாக்குவோம். ஐ. நா. பாதுகாப்பு சபைக்கும் இது பொருந்தும். அரசியலால் முடங்கிவிடாமல், செயல்படத் தயாராக, அதிக பிரதிநிதித்துவ அமைப்பாக மாற வேண்டும். பிரேசில், இந்தியா, ஜப்பான் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் ஐ. நா. பாதுகாப்பு அவையில் நிரந்தர உறுப்பினர்களாக வேண்டும். மேலும், ஆபிரிக்காவின் பிரதிநிதித்துவமும் அதில் இருக்க வேண்டும். ஐ. நா. பாதுகாப்பு அவை இவ்வாறு மாறுவதை நாங்கள் பார்க்க விரும்புகிறோம்." என தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியவாதக் கொள்கைகளுக்கு இணங்கக்கூடியோருடன் கூட்டு!

**சாகர காரியவசம் கருத்து**

கொழும்பு, செப். 30

**தேசியவாத கொள்கைகளுக்கு இணங்கக்கூடிய தரப்புக்கள் மட்டுமே கூட்டணியில் இணைந்து கொள்ளமுடியும் என பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.**

மொட்டு கட்சி பொய்யாக கூட்டணிகளை அமைக்காது என சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுஜன முன்னணியின் வேட்பு மனுக்களில் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு கூடுதல் சந்தர்ப்பம் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

வேட்பு மனு தயாரிப்பு தொடர்பில் இரண்டு குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

கீழ் மட்ட குழுவினால் தீர்மானங்களை எடுக்க முடியாத நிலையில் உயர் மட்ட குழுவின் உதவி பெற்றுக்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

தேசியவாத முகாம்களை ஒன்றிணைத்து இந்த தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாகவும், இணக்கப்பாடில்லா தரப்புக்களுடன் இணைந்து பொய்யாக கூட்டணிகள் அமைக்கப்படாது என அவர் குறிப்பிட்டார்.



பொதுஜன முன்னணியின் தேசியவாத கொள்கைகளுக்கு இணங்கக்கூடிய தரப்புக்கள் மட்டுமே கூட்டணியில் இணைந்து கொள்ள முடியும் எனவும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். (அ)

# இந்த வருடத்தில் இதுவரை 39,137 டெங்கு நோயாளர்கள்

கொழும்பு, செப். 30

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 39 ஆயிரத்து 137 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி மேல் மாகாணத்தில் 16 ஆயிரத்து 463 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை டெங்கு நோயினால் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 19 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# இந்திய சிறையில் உள்ள அனலைதீவு மீனவர்களை விடுவிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 30

சீரற்ற காலநிலையால் கடந்த ஜீன் மாதம் இந்தியாவில் கரையொதுங்கிய நிலையில் கைது செய்யப்பட்ட யாழ். அனலைதீவு மீனவர்களை விடுதலை செய்யுமாறு மீனவர்களின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இந்திய சிறையில் உள்ள மைக்கல் பெர்னாண்டோ மற்றும் நாகலிங்கம் விஜயகுமார் ஆகியோரின் மனைவியர் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

இவ்ஊடக சந்திப்பில் வட மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசாவும் பங்கேற்றார். (அ)

# மதுபான அனுமதிப்பத்திரங்களை சட்டவிரோதமாக வழங்கவில்லை!

கொழும்பு, செப். 30

ஜனாதிபதித் தேர்தல் காலப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துவரும் கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானவை என மதுவரித் திணைக்களத்தின் ஆணையர் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு மே மாதம் முதல் 172 மதுபான அனுமதிப் பத்திரங்கள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனூடாக, சுமார் 220 கோடி ரூபா வருமானம் ஈட்ட முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகையை நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவதற்கு அனைத்து நிறுவனங்களும் இணக்கம் தெரிவித்துள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் ஆணையர் கூறினார். (அ)

# தமிழர் தரப்பில் செயல்பட்டு வரும் கட்சிகள் ஓரணியில் தேர்தலில் களமிறங்க வேண்டும்!

**உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம் கோரிக்கை**

கொழும்பு, செப். 30

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் தரப்பில் செயல்பட்டு வரும் அரசியல் கட்சிகள் ஓர் அணியில் நின்று தமிழர் அபிலாசைகளை முன்கொண்டு செல்லக்கூடியவர்களை களமிறக்க வேண்டும் என உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம், தமிழ் அரசியல் தலைமைகளிடம் கோரிக்கை கோரிக்கை விடுத்துள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க மன்றத்தின் வவுனியாக் கிளை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் பாராளுமன்ற பிரதிநிதிகளை தெரிவு செய்கின்ற இந்த தீர்க்கமான காலகட்டத்தில் அரசியல் தலைமைகளும் ஜனநாயக ரீதியானதும் காலச் சூழலுக்கு ஏற்றதுமான முடிவுகளை எட்ட வேண்டிய தருணத்தில் உள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இனங்களுக்கு இடையில் குரோதங்களையோ முரண்பாடுகளையோ ஏற்படுத்தாத வகையில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு உண்மைகளை வெளிப்படுத்தி ஜதார்த்த பூர்வமான வாக்குறுதிகளை வழங்கி இந்தத் தேர்தலில் அரசியல் தலைமைகள் தங்களுக்கான தேர்தல் தளத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் எனவும்

தமிழர்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தின் வலிமையை நிலைநாட்டுவதற்காக தமிழர் தரப்பில் செயல்பட்டு வரும் அரசியல் கட்சிகள் ஓர் அணியில் நின்று அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் செயல்பாட்டை முன்னெடுக்க வேண்டும் எனவும் இளம் சமூகத்தினரையும் புதியவர்களையும் களம் இறக்கி ஆரோக்கியம் உள்ள ஒரு அரசியல் தளத்தை உருவாக்க வேண்டும் எனவும் உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ)

# பாராளுமன்றத் தேர்தல் ஏற்பாடு குறித்து ஆராய்வு

கொழும்பு, செப். 30

பாராளுமன்றத் தேர்தலுக்கு 11 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும், அதற்கு ஜனாதிபதி கையொப்பமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான முதற்கட்ட பணிகள் குறித்த கலந்துரையாடல் நேற்று முன் தினம் நடைபெற்றது.

தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தலைமையில் தேர்தல் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள், பிரதி மாவட்ட தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பாராளுமன்றத் தேர்தலுக்கு 11 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும், அதற்கு ஜனாதிபதி கையொப்பமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை ஏற்பாடு செய்வது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ)

# வவுனியா தமிழ் மத்திய ம.வியில் 27 பேர் 9 பாடங்களில் விசேட சித்தி

வவுனியா, செப். 30

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய வரலாற்றில் முதல் தடவையாக 27 மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் விசேட சித்தி பெற்று உள்ளதாக பாடசாலையின் அதிபர் ஆ. லோகேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் கடந்த காலங்களிலும் அதிகளவான பெறுபேறுகளைப் பெற்று மாவட்டத்தில் முன்னிலை வகித்து வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது வெளிவந்துள்ள சாதாரண சாதாரண தர பரீட்சை பெறுபேற்றிலும் 27 மாணவர்கள் விசேட சித்திகளையும் 18 மாணவர்கள் எட்டுப் பாடங்களில் விசேட சித்தியையும் ஒரு பாடத்தில் திறமை சித்தியையும் பெற்று சித்தி அடைந்துள்ளதுடன் அதிகளவான மாணவர்கள் இம்முறை அனைத்து பாடங்களிலும் சித்தி அடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டத்தை படித்துவிட்டு பேசவேண்டும்!

**என்.வி.சுப்பிரமணியம் கருத்து**

யாழ்ப்பாணம், செப். 30

தமிழ்நாட்டு மீனவர்களை தமிழக முதலமைச்சர் காலத்திற்கு காலம் ஏமாற்றுவதை போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் இது மிகவும் கவலைக்குரிய விடயம் எனவும் அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என். வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக எமது நாட்டு கடற்படையையும் அரசாங்கத்தையும் குற்றச்சாட்டுவதை விட்டுவிட்டு, 2016 ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் எட்டப்பட்ட உடன்படிக்கையையும், சட்டத்தையும் தமிழக முதலமைச்சர் படித்துப் பார்க்க வேண்டும் என அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (அ)

# சித்த, சுதேச மருத்துவர்களை கௌரவித்து விருது வழங்கல்

யாழ்ப்பாணம், செப். 30

சித்த ஆயுர்வேத மற்றும் சுதேச மருத்துவர்களை கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் மற்றும் சிறுவர் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் பா.சயந்தனின் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக மயக்க மருந்து உணர்வழியியல் வைத்திய நிபுணர் நா. தரணிதரன், உடுவில் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.சுகுணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆயுர்வேத மற்றும் சுதேச மருத்துவர்களுக்கு, அவர்கள் ஆற்றிவரும் சேவையினை கௌரவித்து விருதுகள் வழங்கப்பட்டன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலரும் சம பங்காளிகளாகவேண்டும் தமிழ் அரசு ஆதிக்கம் செலுத்தமுடியாது!

## புளொட் தலைவர் சித்தார்த்தன் பதில்

வவுனியா, செப். 30

அனைவரும் சம பங்காளிகளாக ஒரு கூட்டமைப்பாக இணைந்தால் அதில் சேரமுடியும் என புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பொதுச் சபை கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

கட்சியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் செயலாளராக நாகலிங்கம் இரட்ணலிங்கம் பொதுச் சபையினால் உத்தியோகபூர்வமாக தெரிவு செய்யப்பட்டார்.

கட்சியின் அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதன் பின்னர் சித்தார்த்தன் கருத்து வெளியிடுகையில்-

இன்றையதினம் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினோம். தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாக செயற்படவேண்டும் என்பது நாங்கள் தொடர்ச்சியாக கூறி வருகின்ற விடயம். ஒரு கட்சி மற்ற கட்சியின் மீது ஆதிக்கம் செலுத்துவதை விடுத்து உண்மையான கூட்டாக செயற்படவேண்டும்.

அன்று தமிழரசுக்கட்சியின் சின்னத்தில் நாங்கள் கூட்டமைப்பாக செயல்பட்டபோது பல பிரச்னைகள் உருவாகியிருந்தன. கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தாங்கள் தனியாக போட்டியிடப்போவதாக தமிழரசுக்கட்சி முடிவெடுத்திருந்தது. அதன் பின்னர் சம்பந்தனுடன் நாங்கள் கலந்துரையாடச் சென்றபோதும் அவர் மிகத்தெளிவாக அதே கருத்தை சொல்லியிருந்தார். நீங்கள் தமிழரசுக் கட்சியை இல்லாமல் செய்ய பாக்கிறீர்களா என்றும் அவர் சொன்னார்.



இருப்பினும் கூட்டமைப்பை விட்டு தமிழரசுக்கட்சி சென்றாலும் நாங்கள் இயங்காமல் இருக்கமாட்டோம் தானே. அப்படி இருக்கவும் கூடாது. எனவே நாங்கள் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பினூடாக உள்ளூராட்சி தேர்தலில் வேட்புமனுவை தாக்கல் செய்தோம். இப்போது பல கட்சிகள் இணைந்திருக்கின்றன.

அவர்கள் தான் விட்டுச் சென்றவர்கள். எனவே அவர்கள்தான் வர வேண்டும். அவர்கள் வந்தால் எமது கட்சிகளோடும்,சிவில் அமைப்புகளின் கூட்டோடும் கலந்துரையாடிய பின்னரே முடிவை எடுக்கலாம். தனிப்பட்ட முறையில் சொன்னால் அவர்களது வரவு இந்த கட்டமைப்பை பெரிதாக்கும். அது எனக்கும் விருப்பம். அனைவரும் இணைவது தமிழ் மக்களுக்கு பலமாகவும் இருக்கும்.

ஆனால் அவர்கள் சொல்லியிருப்பது தமிழரசுக் கட்சி சின்னத்தில் என்று. இது பழையபடி தமிழரசுக்கட்சிதான் முடிவெடுக்கப்போகின்றது என்ற அடிப்படையிலும், ஆதிக்கம் தமிழரசுக் கட்சியினுடையதே. நீங்கள் சேருங்கள். உங்களுக்கு நாங்கள் பார்த்து தருவோம் என்றவாறான ஒரு நிலைப்பாட்டையே கூறியிருக்கிறார்கள். அப்படியான நிலைப்பாட்டில் நாங்கள் போக முடியாது. அனைவரும் சமபங்காளிகளாக ஒரு கூட்டமைப்பாக இணைந்தால் அதில் சேரமுடியும். அதற்கான நேர காலம் இருக்கிறதோ தெரியாது. அவர்கள் மூன்று நாட்களையே அவகாசமாக கொடுத்துள்ளனர் - என்றார். (அ-10)

# மகளுக்கு தீக்காயங்களை ஏற்படுத்திய தாய் கைது

கொழும்பு,செப்.30

முன்பள்ளிக்கு செல்ல மறுத்த தனது மகளைத் தீக்காயங்களை ஏற்படுத்திய தாயொருவரை கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டி, நாகஸ்தென்ன பகுதியில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்த 30 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தாய் கரண்டியை சூடாக்கி சிறுமியின் உடலில் தீக்காயங்களை ஏற்படுத்தியுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

காயமடைந்த சிறுமி தற்போது கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அரசமைப்பு...

இந்த விடயம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் அடுத்த பாராளுமன்றம் கூடும் வரை சபாநாயகர் தலைமையில் அரசியலமைப்பு பேரவை செயற்பட வேண்டும்.

தற்போதைய நிலவரப்படி, அரசியலமைப்பு பேரவையின் தலைவராக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தொடர்ந்தும் செயற்படுகிறார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, அமைச்சர் விஜித ஹேரத், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளான கலாநிதி பிரதாப் ராமானுஜம், கலாநிதி அனுலா விஜேசுந்தர மற்றும் கலாநிதி தினேஷா சமரரத்ன ஆகியோர் இதன் ஏனைய உறுப்பினர்களாவர். (அ)

## கடந்த...

சிவஞானம் முன்வைத்தார்.

"நமது அரசியலில் மாற்றம் வர வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள். தேர்தலில் புதியவர்கள்- இளையவர்கள் போட்டியிடவேண்டுமென்பது மக்களின் எதிர்பார்ப்பு. அதை உணர்ந்து செயற்பட வேண்டியது கட்சியிலுள்ள ஒவ்வொருவரின் கடமை. புதியவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காக, கடந்த பொதுத்தேர்தலில் தோல்வியடைந்த முன்னாள் எம்.பிக்கள் மற்றும் ஏனையவர்கள் இம்முறை போட்டியிடாமலிருக்க வேண்டும்" - என்றார் சிவஞானம்.

இதன்போது சேனாதிராசா கலையமுதன் குறுக்கிட்டு, "அப்படி வாய்ப்பளிக்கப்படாதவர்கள் மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட முயல்வார்கள். அந்த தேர்தல்களிலும் அவர்கள் போட்டியிடக்கூடாது" என்றார்.

இருவரது யோசனையும் மத்திய செயற்குழுவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (அ)

## திடீரென...

கூட்டத்தில் பங்கேற்ற பொது கட்டமைப்பின் ஓர் அங்கமான தமிழ் மக்கள் பொதுச் சபை கேட்டுக்கொண்டது.

இந்த கலந்துரையாடலில், எதிர்வரும் பொதுத்தேர்தலில் சங்கு சின்னத்தில் தாம் போட்டியிடுவதாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் குறிப்பிட்டனர். இதில் சிவில் சமூகத்தினருக்கு ஆட்சேபனையிருக்கவில்லை. தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதா என்பதை தீர்மானிக்க மட்டுமே தமக்கு 2 நாட்கள் அவகாசம் தேவையென குறிப்பிட்டிருந்தனர்.

இந்த நாட்களில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தமது தேர்தல் ஏற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதனை அடுத்து தேர்தலில் சங்கு சின்னத்தை பயன்படுத்த அனுமதி கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சார்பில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

ஆயினும் பின்னர் திடீரென இந்த முடிவு மாற்றப்பட்டு பொதுத் தேர்தலில் பங்கேற்பதில்லை என்றும் சங்கு சின்னத்தைப் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு கோருவது என்றும் நேற்று நடந்த பொதுச்சபைக் கூட்டத்தில் முடிவாகியுள்ளது.

ஆயினும் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைவரும் இந்த முடிவை ஏற்கவில்லை என்றும் அவர்கள் தேர்தலில் போட்டியிடும் தமது விருப்பத்தை அடுத்து வரும் நாள்களில் வெளியிடுவார்கள் எனவும் கூறப்பட்டது.(அ)

## சர்வதேச...

தவணைக் கொடுப்பனவை வழங்குவது தொடர்பில், இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகள், நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் புதிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து அந்தக் குழு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளது.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நிலைமை தொடர்பில் ஆராயவுள்ளது. (அ)

## பொதுத்...

பொதுக் கட்டமைப்பின் வேட்பாளராகவே தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டார். 226,000 மக்கள் வாக்களித்திருந்தனர். இவ்வாறானதொரு சூழலில் தமிழ்த் தேசியப் பெதுக்கட்டமைப்பை கலைக்க வேண்டும் என்னும் கோரிக்கைகளை சிலர் முன்வைத்த நிலையிலேயே, தமிழ் மக்கள் பொதுச் சபை இவ்வாறானதொரு முடிவை அவசரமாக எடுத்திருக்கின்றது. தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு தொடர்பில் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்ற சூழலில், அதனை உடைக்கும் நோக்கிலேயே தமிழ் மக்கள் பொதுச் சபையிலுள்ள சிலர் இவ்வாறானதொரு முடிவை நிர்ப்பந்தித்திருப்பதாகவும் உள் தகவல்கள் கூறுகின்றன. இதற்குப் பின்னால் ஜனநாயக தமிழ் தேசிக் கூட்டணிக்கு எதிரான கட்சிகளின் ஊடுருவல் இருக்கலாம் என்னும் சந்தேகம் நிலவுவதாகவே அவதானிகள் தெரிவிக்கின்றனர். ஏனெனில் கடந்த 26ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற பொதுக் கட்டமைப்பின் சந்திப் பின்போது விடயங்கள் சுமூமாக உரை யாடப்பட்டிருந்தன ஆனால் தற்போது நிலைமைகளில் திடீர் மாற்றம் தெரிகின்றது. (அ)

## கூட்டமைப்புடன்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை ஓரணியில் எதிர்கொள்ள வேண்டும் என்பது எனது விருப்பம்.

நாங்கள் தமிழரசு காட்சி தவிர்ந்த ஒரே நிலைப்பாட்டில் பயணிக்கின்ற தமிழ் கட்சிகள் தமிழ் பொதுக் கட்டமைப்பாக ஒன்றிணைந்து செயல்படுகின்றன.

தமிழரசு கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பாக தேர்தலில் போட்டியிடும் கோரிக்கையை முன்வைத்திருக்கும் நிலையில் உடனடியாக அதற்கு சம்மதம் தெரிவிக்க முடியாது.

ஏனெனில் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பாக நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் குறித்த விடயம் தொடர்பில் சக தமிழ் கட்சிகள் தலைவர்களுடன் பேசி இறுதி முடிவை தெரிவிப்போம் - என்றார். (அ)

## நாமலே...

சென்றவர்கள் பொதுத் தேர்தலில் எந்த கட்சியில் போட்டியிடுவது என்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியையும், ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றி ணைக்கும் முயற்சிகள் தீவிரமடைந் துள்ள நிலையில் பொதுஜன பெரமுன வின் ஒரு தரப்பினர் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலின்போது எம்மில் பெரும்பாலானோர் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் சென்றார்கள்.

நாட்டுக்காக சென்றதாக குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தங்களின் குறுகிய நலன்களுக்காகவே இவர்கள் சென்றார்கள். கட்சி தாவலில் ஈடுபடுபவர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளப் போவதில்லை.

இம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச பிரதமர் வேட்பாளராக களமிறங்குவார். எவருடனும் கூட்டணியமைக்க போவதில்லை. பொதுத்தேர்தலில் மாவட்ட ரீதியில் எமது பலத்தை நிரூபிப்போம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பாராளுமன்றத் தேர்தலில் சங்கு சின்னம் வேண்டும்!

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதம்

வவுனியா, செப். 30

**ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு சங்கு சின்னத்தை கோரி தேர்தல் ஆணைக் குழுவுக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளதாக கட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தமிழ் பொது கட்டமைப்பாக சிவில் அமைப்புகளுடன் இணைந்து அரியநேத்திரனை தமிழ் பொது வேட்பாளராக களம் இறக்கியிருந்தது.

குறித்த சுயேச்சை குழுவுக்கு சங்கு சின்னமாக வழங்கப்பட்ட நிலையில் தேர்தலில் போட்டியிட்டு இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்றிருந்தது.

இந்நிலையில் பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் தேர்தல் சட்டங்களின் பிரகாரம் தேர்தல் அறிவிக்கப்பட்டு ஏழு நாட்களுக்குள் தமக்கான சின்னத்தை கோரி விண்ணப்பிக்க முடியும் என்ற ஒரு விதிமுறையின் கீழ் குறித்த கோரிக்கையை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

இதன் பிரகாரம் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் சங்கு சின்னத்தில் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கு ஏற்கனவே குத்துவிளக்கு சின்னம் பயன்படுத்தி இருந்த போதிலும் அதனை விடுத்து சங்கு சின்னம் தற்போது மக்கள் மத்தியில் அறியப்பட்டுள்ளமையினால் அந்த சின்னத்திலேயே போட்டியிடுவதற்கு கூட்டணியில் பலரும் ஆர்வம் கொண்டுள்ளனர் - என்றார். (அ)

# மைத்திரி வெளியிடும் அதிரடியான அறிவிப்பு!



கொழும்பு, செப். 30

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தும் அறிவிப்பொன்றை விடுக்கத் தயாராகி வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தனது நல்லாட்சி காலப்பகுதியில் இடம்பெற்ற உண்மைச் சம்பவங்கள் தொடர்பில் அவர் தெரிவிக்கலாம் என அரசியல் ஆய்வாளர்கள் எதிர்ப்பார்க்கின்றனர்.

இந்த அறிவிப்பு எதிர்வரும் மாதத்தின் முதல் வாரத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிடலாம் எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு தொடர்ந்து அழைப்புகளை மேற்கொண்டு, கட்சியை ஒன்றிணைத்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவோம் என தெரிவித்து வருவதாக அறியக் கிடைத்துள்ளது.

பல குழுவினர் கட்சியை ஒன்றிணைத்து பயணிக்க தயாராக இருப்பதாகவும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளதாக குறித்த செய்தி கூறுகின்றது.

# நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல எவ்வித அவசியமும் கிடையாது!

## கூறுகிறார் கமல் குணரட்ன

கொழும்பு, செப். 30

நாட்டை விட்டு தப்பியோடியதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன தெரிவித்துள்ளார்.

தாமும் தமது மனைவியும் நாட்டை விட்டு தப்பியோடியதாக சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டு வரும் பிரசாரங்களில் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தாம் பிறந்த நாடு எனவும், இது தாம் வளர்ந்த வாழ்ந்த நாடு எனவும் வாழ்ந்து மரிப்பதும் இந்த நாட்டிலேயே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை விட்டு தப்பிச் செல்ல எவ்வித அவசியமும் கிடையாது எனவும் தாம் எந்தவிதமான பிழைகளும் செய்ததில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது இளமைக் காலம் முழுவதும் நாட்டு மக்களுக்காகவும், எதிர்கால தலைமுறையினருக்காகவும் காடுகளில் தீவிரவாதிகளுடன் போரிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தீவிரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்ட நாட்டை விட்டு யாருக்கும் அஞ்சி தப்பிச் செல்லப் போவதில்லை எனவும், தாம் எங்கும் தப்பிச் செல்லவில்லை எனவும் தம்மை எந்த நேரத்திலும் சந்திக்க முடியும் எனவும் கமல் குணரட்ன குறிப்பிட்டுள்ளார். (அ)



# 13,306 மாணவர்களுக்கு 9 பாடங்களிலும் 'ஏ'!

கொழும்பு, செப். 30

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் 13,309 மாணவர்கள் 9 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 2.12 வீதமானோர் அனைத்து பாடங்களிலும் சித்தியடைய தவறியுள்ளனர்.

75.72 சதவீதமான மாணவர்கள் உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். (அ)

# 26 மாதங்களுக்குள் ரணில் பெற்ற ரூ.5,113 பில்லியன் உள்நாட்டு கடன்

கொழும்பு, செப். 30

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 26 மாதங்களுக்குள் குறைந்த பட்சம் 5,113 பில்லியன் ரூபா உள்நாட்டுக் கடன்களை பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் கற்கைப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள இதனைத் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் மொத்த உள்நாட்டு கடன் அளவு 12,442 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது.

2024 ஜூன் மாதமளவில் 17,555 பில்லியன் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பில் பேராசிரியர் மேலும் கருத்து தெரிவித்த அவர்-

5,113 பில்லியன் ரூபா உள்நாட்டுக் கடன் தேறியவகையில் அதிகரித்துள்ளமை தொடர்பில் அந்நிய செலாவணி விகித அதிகரிப் பினை உள்ளிட்ட துணை நிலைக் காரணிகள் எதுவுமே தாக்கம் ஏற்படுத்தவதில்லையென தெளிவுபடுத்தினார். அதாவது நேரடியாகவே கடன் பெற்றமையால் இந்த கடன்தொகை அதிகரித்துள்ளது - என்றார். (அ)

# ப்ரைட் ரைஸ், கொத்து ரொட்டி விலை நேற்று முதல் குறைப்பு!

கொழும்பு, செப். 30

ப்ரைட் ரைஸ் மற்றும் கொத்து ரொட்டியின் விலை நேற்று நள்ளிரவு முதல் 40 ரூபாவினால் குறைக்கப்படும் என உணவகங்கள் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சமீப காலமாக முட்டை விலை குறைந்துள்ளதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எனினும், வெதுப்பகப் பொருட்களின் விலையில் இதுவரை எந்த மாற்றமும் இல்லை. (அ)

# இந்திய மீனவர் 17 பேர் கைது!

யாழ்ப்பாணம், செப். 30

யாழ்ப்பாணம் - நெடுந்தீவை அண்மித்த கடற்பகுதியில் அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 17 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 2 படகுகளும் கைப்பற்றப்பட்டதாகக் கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது நேற்று முன்தினம் இரவு இவர்கள் கைதாகியுள்ளனர்.

கைதான மீனவர்கள் தலைமன்னாருக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் பரிசோதகர் காரியாலயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படை பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# உணவுப் பொருட்களின் விலை குறையவில்லை

கொழும்பு, செப். 30

எரிவாயு, முட்டை, மற்றும் இதர பொருட்களின் விலைகள் கணிசமாக குறைந்துள்ள நிலையில், சிற்றுண்டி உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலைகள் குறையவில்லை என நுகர்வோர் கூறுகின்றனர்.

இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வணிகர்கள் நுகர்வோரை ஒடுக்குவதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த ஆண்டுகளில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியுடன், முட்டை, கோதுமை மா மற்றும் உணவு உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்கள், எரிவாயு எரிபொருள் போன்ற பல பொருட்களின் விலைகள் அதிகரித்தன.

அதனுடன் உணவு உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் தமது உற்பத்திப் பொருட்களின் விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்ததால் வழமை போன்று இம்முறையும் நுகர்வோர் சுமையை சுமக்க வேண்டியிருந்தது.

எனினும், எரிவாயு, கோதுமை மாவு மட்டுமின்றி முட்டையின் விலையும் கணிசமாக குறைந்துள்ளது.

அதிகாரிகள் தங்கள் மீது செல்வாக்கு செலுத்துவதில் கவனம் செலுத்தாததால், உணவுப் பொருட்களின் விலையை குறைக்க வியாபாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என நுகர்வோர் குற்றம் சாட்டுகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.